# கிறிஸ்தற்ற

# கிறிஸ்து மார்க்கம்



பரமானந்தம் ஐயர்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்

எஸ். பரமானந்தம் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை 600 003

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, MADRAS-3

**KIRISTATRA KIRISTU MĀRKKAM**
By REV. S. PARAMANANTHAM

© C.L.S.

*First Printed, 1951*
*Reprinted, 1996*

விலை ரூ. 30.00

Printed at the C.L.S. Press, Madras-7. L5846

## பதிப்புரை

இந்த நூற்றாண்டில் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் கூட்டும் வகையில் பல தியான நூல்களையும் அருளுரைக் கோவைகளையும் எழுதி வழங்கியவர் அருள்திரு. எஸ். பரமானந்தம் ஐயர் ஆவார். அருளுரை மன்னர் என்று போற்றப்படுகின்ற அருட்கவிஞர் அவர். அவருடைய அருளுரைகளைக் கேட்ட மூத்த தலைமுறையைச் சேர்ந்த சிலர் இன்னும் நம்மோடு இருக்கிறார்கள். அத்தகையோர் ஐயரை அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்வதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அவருடைய ***ஏழு வார்த்தைகள், கிறிஸ்துவின் ஜீவியம், கிறிஸ்தவ ஜீவியம், இருதயத்தில் கிறிஸ்து, தேவனுடைய ஈவு, கிருபைப் பிரவாகம், நூறு பிரசங்கங்கள், கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம், என் சுய சரிதை, நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர், சுவிசேஷப் பிரசங்கங்கள்*** போன்ற நூல்களை நம்முடைய தலைமுறையினரும் படித்துப் பயன் பெற்றுள்ளனர். இந்நூல்களுள் பலவற்றை வெளியிடும் வாய்ப்பு கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்திற்குக் கிடைத்து வந்துள்ளது.

இவ்வாண்டில் இவ்வாய்ப்பினை வெகுவாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இதற்கு ஒரு காரணம் வரும் *1997*ஆம் ஆண்டில் ஐயருடைய *125*ஆவ்து பிறப்பாண்டு தொடங்குகிறது. அவ்வாண்டிலும் அதற்கு முன்பும் அவருடைய நூல்கள் சிலவற்றின் மறு பதிப்புக்களை வெளிக்கொணரும் திட்டத்தின்கீழ் இப்போதிருந்தே சில நூல்கள் வெளிவர இருக்கின்றன.

அதோடு, ஐயர் இருபத்தி ஐந்து வயது இளைஞராக நாசரேத்தில் உடற்பயிற்சி ஆசிரியப் பணியாற்றி வந்த காலக்கட்டத்தில் 1897ஆவது ஆண்டில் தம்முடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் மாறுதலைக் கண்டவர். அந்நிகழ்ச்சியின்போது ஆண்டவர் தம்மோடு பேசியதையும், அவர் ஆண்டவரோடு உரையாடியதையும் **என் சுய சரிதை** என்னும் நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'ஒருநாள் பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். வகுப்பில் இருந்த பையன்களுக்கு எழுத்து வேலை கொடுத்தேன். அவர்கள் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். நான் மேஜையின் பக்கமாக உட்கார்ந்துகொண்டிருந்தேன். அந்த அமர்ந்த வேளையில் என் உள்ளத்தில் ஆண்டவர் பேசும் சத்தம் கேட்டது. ''நான் உன்னிடத்தில் அன்புகூர்ந்து, உனக்காக என் உயிரைக் கொடுத்தேன். நீயோ என்னைத் தேடவுமில்லை, என்னை அறியவுமில்லை, என் பேரில் உனக்கு அன்பும் இல்லை'' என்று பேசினார். இது நானே நினைத்துக்கொண்ட நினைவல்ல. ஒருவன் தன்னை ராஜாவென்று நினைத்துக்கொள்வதால் ராஜாவாக மாட்டான். நானே நினைத்துக்கொள்வதால் என் ஜீவியத்தில் இவ்வளவு பெரிய மாறுதல் உண்டாகமாட்டாது. ஒரு பலத்த பிரசங்கி என் முகத்தைப் பார்த்துப் பேசியிருந்தாலும் இவ்வளவு உணர்ச்சி உண்டாயிருக்கமாட்டாது. கர்த்தரே பேசினார். அதைச் சகிக்க முடியாமல் நான் எழுந்து பக்கத்து அறைக்குள் பிரவேசித்து, அங்கே முகங்குப்புற விழுந்து அழுது: ஆண்டவரே, நீர் சொன்னது உண்மைதான் ஐயா. இத்தனை வருஷங்களாக நான் கிறிஸ்தவன் என்றிருந்தும் உம்மை நான் தேடவுமில்லை, உம்மை அறியவுமில்லை, உமது பேரில் எனக்கு அன்பும் இல்லை ஐயா என்று அறிக்கையிட்டதோடு, ஆண்டவரே, ஒன்று சொல்லுகிறேன், ''இந்நிமிஷ முதல் நான் உமக்கே சொந்தம்'' என்பதை எழுதிக்கொள்ளும் என்று சொல்லி, எழுந்து கண்ணீரைத் துடைத்து, வகுப்புக்குத் திரும்பி வந்து உட்கார்ந்தேன். நடந்ததென்னவென்பதை உலகில் ஒருவரும் அறியார்கள். இந்த இரட்சணிய மாறுதல் 1897இல் உண்டாயிற்று' (பக்கம் 26,27).

இந்த இரட்சிப்பின் மாறுதல் நிகழ்ந்து ஒரு நூற்றாண்டு அடுத்த ஆண்டில் நிறைவுறவிருப்பது குறிப்பிட வேண்டிய செய்தியாகும். அவருடைய நூற்றி இருபத்தைந்தாவது பிறப்பாண்டும் மறுபிறப்பின் நூற்றாண்டும் அடுத்த ஆண்டில் ஐயரை அதிகமாக நாம் நினைவுகூர்ந்து நம்முடைய 'இரட்சிப்பின்



மாறுதலை' எண்ணிப் பார்க்கவும், அவருடைய பணிகளை நாம் முனைந்து தொடரவும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.

ஐயருடைய இந்நூலை மறு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்நூலை முதன் முறையாக வாசிக்கும் அன்பர்களும், ஏற்கெனவே வாசித்து இப்போது இன்னொரு முறை வாசிக்க உட்படும் அன்பர்களும் தங்கள் ஆன்மீக வாழ்க்கையில் நற்பலன்களைப் பெறுவார்களாக.

சென்னை — அன்பன்

*14-8-96* — **டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்**

## அருள்திரு. பரமானந்தம் ஐயர் தம்மைப்பற்றிக் கூறுவன :

*பிறந்தது சங்கரன் கோயில் பேச்சியம்மாளிடம்*
*வளர்ந்தது நாசரேத்தூர்*
*படித்தது மிடில் ஸ்கூல்*
*பார்த்தது ஜிம்னாஸ்டிக் வேலை*
*அடைந்தது முழு ஏமாற்றம்*
*கிடைத்தது தேவ ரட்சிப்பு*
*நிறைந்தது கிறிஸ்துவின் அன்பு*
*நடந்தது ரட்சண்ய ஊழியம்*
*கண்டது மிகுதியான பலன்*
*கர்த்தருக்கே துதி ஸ்தோத்திரம்!*

'என் சுய சரிதை'
*(பக்கம் 101,102)*



## மாபெரும் கவிஞர்

தினமே நானுனைத் தேடிப் பணியத்
துணைபுரி வாயெனத் தொடங்கும் பாடலை
மனதைக் கவரும் வகையில் அளித்த
மாபெருங் கவிஞரை வாழ்த்திடு கின்றேன்!

பரமா னந்தர் பாடலைக் கேட்டால்
பாறை நெஞ்சும் பஞ்சாய் மாறும்!
திறமாய் இசையும் சேர்ந்து விட்டால்
திகட்டா தினிக்கும் தேனும் தோற்கும்!

திருப்புகழ் மற்றும் தேவா ரங்கள்
தியாகர் பண்கள் திறமுடன் கற்றே
அருட்புக ழோதும் அரும்பா சுரங்கள்
அழகாய்ச் சபைக்கே அளித்தோர் வாழ்க!

எத்தனை பாடல் எழுதிக் குவித்தார்!
இயேசுவை அவற்றில் இனிதாய் நிறைத்தார்
இத்தனை வகையாம் இசைவடி வங்கள்
எந்தை அருளின் ஈவே என்பார்!

**கவிஞர் தயா**
'கிறிஸ்தவ அருட்கவிஞர்கள்'
*(பக்கம் 38,39)*

# முகவுரை

**உ**லகிலுள்ள சபையாரனைவருக்கும் கிறிஸ்தவர்கள் என்பது பொதுப் பெயர். இப்பெயர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதல்ல. கிறிஸ்துவின் உத்தம அடியாரைக் கவனித்த மற்றவர்களால் இப்பெயர் உண்டாயிற்று. கிறிஸ்து உலகத்தில் ஒரு மதத்தை ஸ்தாபிக்கவோ, உபதேசம் தந்துபோகவோ வந்தவரல்ல. அவர் **தம்மையே** நமக்குத் தந்த தியாகேசனாக வந்தார். **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்; கிறிஸ்துவை உடையவர்களே கிறிஸ்தவர்கள்.** இவைகளைப் பிரிக்க முடியாது. இங்கேதான் கிறிஸ்து மார்க்கத்துக்கும் மற்ற மதங்களுக்கும் வித்தியாசமிருக்கிறது. உலகில் காலா காலங்களில் சாஸ்திரிகள், ஞானிகள், சாதுக்கள், ரிஷிகள், குருக்கள், மகாத்துமாக்கள் தோன்றி மக்களுக்கு உபதேசம் செய்து மறைந்தார்கள். மக்கள் அவ்வுபதேசங்களைப் படித்து வருகிறார்கள். உபதேசம் தந்தவர்களைக் காணோம். ''எங்களை நம்புங்கள், நாங்கள் உங்களை ரட்சிப்போம்'' என்று அவர்கள் சொல்லவில்லை. கிறிஸ்து மார்க்கமோ உபதேசங்களை மாத்திரம் சார்ந்ததல்ல. கிறிஸ்துவாகிய **ஆளைச்** சார்ந்தது. **கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்.** கிறிஸ்து இல்லையேல் கிறிஸ்து மார்க்கமும் இல்லை. மற்றவர்களைப்போல் அவர் மறைந்துபோனவரல்ல. அவர் என்றென்றும் பிழைத்திருக்கிறார். தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்தவராய் விசுவாசிகளின் உள்ளங்களில் வசிக்கிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

**கிறிஸ்தவர்கள்** என்னும் பேர் மிகவும் அருமையானது. சீஷர்களாயிருப்பவர்களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்னும் பேர் தகுமேயன்றி மற்றவர்களுக்கல்ல. ஆண்டவர் தமதடியாரைச் சீஷர்கள் என்று அழைத்தார். சீஷர்கள் லட்சணங்கள் எவையென்பதையும் விவரித்தார். அவர் அப்போஸ்தலரை அனுப்பினபோது: நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் **கிறிஸ்தவர்களாக்குங்கள்** என்று சொல்லாமல் **சீஷர்களாக்குங்கள்** என்றார். சுவிசேஷத்திலும் நடபடிப் புஸ்தகத்திலும் சீஷர்கள் என்னும் சொல்



நூற்றுக்குமேல் வருகிறது. **கிறிஸ்தவன் என்னும் சொல்லோ மூன்றே இடங்களில் மாத்திரம் வருகிறது. ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன்** என்று சொல்வது இலேசு; சீஷன் என்று சொல்வதோ கஷ்டம். கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்டு அனுதினமும் அவரைப் பின்சென்று, அவரது சாயலுக்கொப்பாக வளருகிறவன் சீஷன். சீஷர்களைக் கொண்டுதான் ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தாரேயன்றி வேதக்காரரைக் கொண்டல்ல.

**கிறிஸ்து கிறிஸ்து என்று நாம் வாசிப்பிலும், ஜெபத்திலும், பாட்டிலும், பேச்சிலும், பிரசங்கத்திலும் தாராளமாகச் சொல்லுகிறோம். அவர் யார்** என்பதைக் கொஞ்சமாகிலும் அமர்ந்து யோசித்தோமா? அவரது **தெய்வீக உன்னத மகத்துவங்களை** நம்பினோமா? நம்பினதுண்டானால் ஆச்சரியத்தால் பரவசமடைவோம். பயபக்தியுடன் அவரைப் பணிந்துகொள்வோம். அவரையே ஒப்பற்ற செல்வமாகக் கொண்டாடுவோம். நாம் எங்கேயிருந்தாலும், எந்நிலைமையிலிருந்தாலும் அவரை மறக்கவோ அவரைவிட்டு விலகவோ முடியாதபடி அவரே நமக்குள் ஜீவனாயிருப்பார். இந்த அனுபவமுள்ள தேவ மக்கள் இங்குமங்குமாக இருக்கிறார்கள். மற்றவர்களைப்பற்றி என்ன?

விசுவாசப்பிரமாணத்தைக் காலமெல்லாம் சொல்லுகிற அவிசுவாசிகள் அநேகர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற கிறிஸ்தற்றவர்கள் அநேகர். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ச் சென்றும் ஆண்டவரை அறியாதவர்கள் அநேகர். அடிக்கடி நற்கருணையில் சேர்ந்தும் ஆண்டவரோடு ஐக்கியமில்லாதவர்கள் அநேகர். எத்தனை பிரசங்கங்களைக் கேட்டும் குணத்தில் சற்றும் மாறாதவர்கள் அநேகர். இவர்கள் தண்ணீரற்ற கிணறுகள். கனியற்ற விருக்ஷங்கள். உயிரற்ற சரீரங்கள். சாரமற்ற உப்புகள். மணமற்ற புஷ்பங்கள். பிரகாசமற்ற விளக்குகள். கிறிஸ்து உலகத்துக்கு வந்த நோக்கம் தங்களில் நிறைவேறியிருக்கிறதாவென்று இவர்கள் யோசிக்கிறதில்லை. என் நடுப்பிராயம் வரை நானும் இதுபோலவே கிறிஸ்துவை அறியாதவனாயிருந்தேன். கிருபையுள்ள ரட்சகரோ என்பேரில் கண்ணோக்கமாயிருந்தாரென்பது பிந்தி வெளிப்பட்டது.

கிறிஸ்துவை நாம் ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைப்பது மெய்யானால் நமது **குணம்** கட்டாயம் மாறும். அவர் தமது ஆவியின் மூலம் நமக்குள் பிழைப்பதால் அவர் **சிந்தை** நமக்குக் கிடைக்கும். நாம் அவரில் நிலைத்திருப்பதால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான **கனிகளைக்** கொடுப்போம். நமது குறைவுகளை நாம் உணர்ந்து கிறிஸ்துவின் அடியார்களாக வேண்டுமென்பதே இச்சிறு புஸ்தகத்தின் நோக்கம். ஒரு ஆளைக் குறித்தோ அல்லது ஒரு சபையை நினைத்தோ இது எழுதப்பட்டதல்ல. சபைகள் சங்கங்களின் தற்கால நிலைமையைக் கவனித்தும், தேவ ஊழியர் நிறைவேற்றவேண்டிய வேலையின் உத்தரவாதத்தை உணர்ந்தும் இது எழுதப்பட்டது. இச்சிறு புஸ்தகம் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி ஆண்டவர் அருள்செய்வாராக.

**எஸ். பரமானந்தம்**



# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்? | ... | 1 |
| 2. | கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களால் சபைகளுக்குச் சங்கடம் | ... | 2 |
| 3. | குருக்களுக்கும் சபையாருக்குமுள்ள சம்பந்தத்திலும் சங்கடங்கள் உண்டு | ... | 4 |
| 4. | கிறிஸ்தற்ற போதகரும் கிறிஸ்தற்ற சபையாரும் | ... | 4 |
| 5. | குருப்பட்டத்தின் நோக்கம் என்ன? | ... | 6 |
| 6. | மிஷனெரிகள் வேலை | ... | 8 |
| 7. | வேறு வேலைகள் கூடாதா? | ... | 10 |
| 8. | குருமாருக்கு இக்காலத்தில் மதிப்பில்லையா? | ... | 12 |
| 9. | குருக்களும் பாடுள்ள மனுஷர்தானே | ... | 15 |
| 10. | சபை உத்தியோகஸ்தர் | ... | 18 |
| 11. | ஆலோசனைச் சங்கமும் சபைகளும் | ... | 21 |
| 12. | தென் இந்திய சபை | ... | 24 |
| 13. | பல மிஷன்கள் | ... | 27 |
| 14. | தேவ ஊழியமும் பொருள் சகாயமும் | ... | 29 |
| 15. | கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம் இருக்கமுடியுமா? | ... | 35 |
| 16. | கிறிஸ்தற்ற நிலைமையின் மோசம் | ... | 38 |

# 1. கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்?

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல"
(ரோமர் 8. 9)

என் ஊழியத்தின் ஆரம்பத்தில் நான் தென் இந்தியாவிலுள்ள. பல சபைகளிலும் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்திவந்தேன். ஒரு கிராமத்துக்கு நான் போயிருந்தபோது அங்குள்ள சபையைப்பற்றி உபதேசியார் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர் தேவ பக்தியுள்ளவர். அது புதிதாக கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்த சபை. அவர்கள் இந்துக்களாயிருந்தபோது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வியாச்சியம் நடந்துகொண்டிருந்தது. இதிலே மிஷன்காரர் உதவி செய்து வெற்றி கிடைத்தால் தாங்கள் எல்லாரும் வேதத்தில் சேர்ந்துவிடுவதாக வாக்குக் கொடுத்தார்கள். வெற்றி கிடைத்தது. எல்லாரும் குடும்ப சகிதமாக வேதத்தில் சேர்ந்தார்கள். அவர்களுக்காக அங்கே ஒரு சிறு கோவிலும் கட்டப்பட்டது. உபதேசியார் என்னைப் பார்த்து: ஐயா, இவர்கள் மார்க்கத்தில் சேர்ந்தபோதிலும் முன்னிருந்தபடியேதான் இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்பட்டாலன்றி இவர்கள் மார்க்கத்தில் சேர்ந்ததில் பிரயோஜனமில்லை. அதைப்பற்றித்தான் நீங்கள் முக்கியமாய்ப் பிரசங்கிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதைப்போல் உண்டான சபைகள் பல.

நான் சிறுவனாயிருந்தபோது, ஒரு கிராமத்து ஜனங்களெல்லாரும் மேல் ஜாதியாருக்கும் தங்களுக்குமுள்ள நிலத்தகராறில் மிஷன்மூலம் வெற்றிபெற்றதால் வேதத்தில் சேர்ந்தார்கள். அக்கிராமத்துக்கருகில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஒரு வாய்க்காலில் காலஞ்சென்ற கால்டுவெல் அத்தியக்ஷரவர்களும் பல குருக்களுமாகச் சேர்ந்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்

தை நான் கூடயிருந்து பார்த்தேன். கொஞ்சக் காலம் வேதத்திலிருந்தபின் மிஷனார் தங்களைக் கவனிக்கவில்லை என்று கோபித்துக்கொண்டு இவர்கள் மறுபடியும் இந்து மார்க்கத்துக்குப் போய்விட்டார்கள். இப்படிச் சேருகிறவர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவரை ஜீவனாக ஏற்றுக்கொண்டிருப்பார்களானால் என்ன நேரிட்டாலும் பின்வாங்க மாட்டார்கள். அவர்கள் இந்துக்களாயிருந்தபோதும் கிறிஸ்தற்றவர்களே, வேதத்தில் சேர்ந்த பின்பும் கிறிஸ்தற்றவர்களே. வருகிறவர்கள் குடும்பமாக வந்தாலும் சரி, கிராமமாக வந்தாலும் சரி, கிறிஸ்துவை அவர்கள் அறிந்து அவரை ரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அது அவர்களுக்கும் நல்லது; சபைக்கும் நல்லது. மூவாயிரம் பேர் சபையில் சேர்க்கப்பட்டதெப்படி? முதலாவது அவர்கள் இரட்சகரிடம் சேர்ந்து, அப்புறம் சபையில் சேர்க்கப்பட்டார்கள். "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப். 2: 47). "அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது (அப். 11: 21, 24). கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவருக்குள் பிழைப்பவர்களின் கூட்டமே சபையாகும்.

## 2. கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களால் சபைகளுக்குச் சங்கடம்

கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள் என்று சொல்லும்போது இந்துக்களாயிருந்து புதிதாக வேதத்தில் சேருகிறவர்களை மாத்திரம் குறிக்காது. கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்கள் சபைகளில் எக்காலமும் இருந்தே வருகிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டபோதிலும் தேவ பார்வையில் அவர்கள் கிறிஸ்தில்லாதவர்களே. கிறிஸ்து மார்க்கத்துக்குரிய ஆராதனைகள் ஆசாரங்களை அவர்கள் அனுசரித்தபோதிலும் கிறிஸ்துவுக்கு அவர்கள் ஜீவியத்தில் இடமில்லாததால் அவர்களில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. அவர்கள் பேச்சு, செய்கை, நடக்கையினாலே,



அவர்கள் கிறிஸ்துவை உடையவர்களோ, கிறிஸ்தற்றவர்களோ என்பதை அறியலாம். உலகிலுள்ள மார்க்கங்களில் கிறிஸ்து மார்க்கமும் ஒன்று என்று மற்றவர்கள் பேசுகிறார்களேயன்றி இது தேவமார்க்கம், இது ரட்சிப்பின் மார்க்கம் என்பதை அவர்கள் அறியவில்லை. கிறிஸ்தவர்கள் என்னும் பேர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டதல்ல. அவர் ஒரு மார்க்கத்தை உண்டாக்கும்படி வந்தவரல்ல. கிறிஸ்துதான் கிறிஸ்து மார்க்கம். மகிமைக்கு வழி அவர்தான். தம்மை நம்பி ஏற்றுக்கொண்டவர்களை சீஷர் என்று அழைத்தார். அவர் அப்போஸ்தலரை அனுப்பினபோது: "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் கிறிஸ்தவர்களாக்குங்கள் என்று சொல்லாமல், சீஷர்களாக்குங்கள்" என்று கட்டளையிட்டார். சீஷர்கள் என்பதுதான் ஆண்டவர் தமது அடியாருக்குக் கொடுத்த பேர். சுவிசேஷத்திலும் நடபடிப் புஸ்தகத்திலும் சீஷர்கள் என்னும் சொல் ஏராளமாய் வருகிறது. கிறிஸ்தவர்கள் என்னும் சொல்லோ மூன்று இடங்களில் மாத்திரம் வருகிறது. அந்தியோகியாவில் சீஷர்களைக் கவனித்த மற்றவர்கள் இவர்களைக் கிறிஸ்தவர்கள் என்றார்கள். அகிரிப்பா பவுலைப் பார்த்து: நீ என்னைக் கிறிஸ்தவனாக்கி விடுவாய்போலிருக்கிறதே என்றான். பேதுரு பாடுபடும் கிறிஸ்தவனைப்பற்றி எழுதுகிறார். சீஷர்களாயிருப்பவர்களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்னும் பேர் தகுமேயன்றி, எல்லாருக்கும் தகாது. ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்வது லேசு; கிறிஸ்துவின் சீஷன் என்று சொல்லுவதோ கஷ்டம். ஆண்டவரிடம் கற்றுக்கொண்டு அனுதினமும் அவரைப் பின்செல்லுகிறவனே சீஷன். அப்படிப்பட்ட சீஷர்களைக்கொண்டுதான் ஆண்டவர் தமது சபையை ஸ்தாபித்தார். இன்று சபைகளில் இருக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்? "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல." பின்னே, அவன் யாருடையவன்? கிறிஸ்தற்ற மனுஷர் தங்கள் ஜென்ம சுபாவத்தைக் காண்பிப்பார்களேயன்றி வேறு விதமாய் நடக்க முடியாது. சபையில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும் விரோதங்களுக்கும் இவர்கள் காரணமாயிருக்கிறார்கள்.

## 3. குருக்களுக்கும் சபையாருக்குமுள்ள சம்பந்தத்திலும் சங்கடங்கள் உண்டு

சபையார் ஆண்டவருக்கு உகந்தவர்களாய் நடந்து கொள்ளவேண்டும் என்று நாம் விரும்புவது போலவே, குருக்களும் ஆண்டவருக்குப் பிரியமான ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம். கிறிஸ்தற்ற சபையார் நடுவில் ஒரு நல்ல போதகர் வேலை செய்வாரானால் அவர் கவலைக்கு அளவிராது. தேவபக்தியுள்ள ஓர் சபையில் உதவாத போதகர் ஒருவர் இருப்பாரானால் சபையார் சஞ்சலப்படாதிருக்க மாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் எனக்குத் தெரிந்த இரண்டு மூன்று குடும்பத்தார் சபையைவிட்டு விலகித் தங்கள் வீடுகளிலேயே ஆராதனையை நடத்திக்கொண்டிருந்தார்கள். சபையை விட்டு ஏன் பிரிந்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள்: அந்தப் போதகருடைய ஜீவியத்தில் கிறிஸ்து இல்லை. அவர் நடத்தும் ஆராதனை பிரசங்கங்களில் ஆவியுமில்லை, ஜீவனுமில்லை. எவ்வளவு காலத்துக்கு இந்தச் சித்திரவதையைச் சகித்துக்கொண்டிருப்பது? நாங்கள் சபையை விட்டு விலகி ஒருமனதோடு ஆண்டவரைத் தொழுதுவருகிறோம். அவர் எவ்வளவோ கிருபையாய் எங்களை நடத்திவருகிறார் என்றார்கள். சபைகளிலுள்ளவர்கள் எழுப்புதலுள்ள ஆவியின் கூட்டத்தாரோடு சேர்ந்துகொள்ள விரும்புவதற்குக் காரணம் இதுதான். கிறிஸ்தற்ற சபைகளுக்கு கிறிஸ்தற்ற ஊழியர்களின் குறைவு தெரியாது. ஜீவன் பெற்ற தேவமக்கள் ஒரு நிமிஷத்தில் கண்டுகொள்வார்கள். இப்படியிருக்க ஒரு சபையில் கிறிஸ்தற்ற போதகரும், கிறிஸ்தற்ற சபையாரும் இருந்தால் நிலைமை எப்படியிருக்கும்?

## 4. கிறிஸ்தற்ற போதகரும் கிறிஸ்தற்ற சபையாரும்

இதைப்போல் மோசமும் பரிதாபமுமான விஷயம் வேறில்லை. மிஷனெரிமார் பிரியத்தினாலோ சபையாரின் அழைப்பினாலோ போதகர்களாக ஏற்



படுத்தப்படுகிறோம். நமக்குள் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு, அவருக்கென்றே பிழைக்கும் உத்தம ஊழியர்களுமுண்டு. அநேகர் பட்டம் பெற்றபோதிலும் அவர்களில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை. ஆண்டவர்மீது அன்பில்லை. ஆத்தும வாஞ்சை இல்லை. ஆராதனைகள் சிறப்பாய் நடக்கலாம். பிரசங்கம் சாமர்த்தியமாய்ச் செய்யப்படலாம். என்றாலும் உள்ளத்தை அசைக்கும் தேவாவியின் வல்லமை காணப்படுவதில்லை. நாம் வேத சாஸ்திரம் கற்று பட்டம் பெறுவதாலே தேவ ஊழியராகமாட்டோம். ஆண்டவர் பேதுருவைப் பார்த்து: உனக்கு என்பேரில் அன்புண்டா என்று கேட்டுத் தமது ஊழியத்தில் ஏற்படுத்தினார். ஒருவன் எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால் "என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். அன்புடன் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் உத்தம ஊழியனாவான்.

கிறிஸ்தற்ற போதகர்களுக்கு ஜனங்களை வசப்படுத்தக்கூடிய சாமர்த்தியமுண்டு. சபையாரைச் சந்திப்பதில் தவறார்கள். எங்கெந்தக் குடும்பத்தில் எப்படிப் பேசவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். அவரவருக்குப் பிரியமாகப் பேசி அவர்கள் அனுதாபத்தையும் சிநேகத்தையும் சம்பாதித்துக்கொள்வார்கள். கிறிஸ்தற்ற சபையாருக்குத் தங்களைப்போன்ற போதகர்கள் மேல் அதிகப் பற்றுதல் உண்டு. உற்சாகமாகக் காணிக்கை கொடுப்பார்கள். போதகர் இஷ்டம்போல் நடப்பார்கள். இப்படிப்பட்ட போதகர்களுக்கும் சபையாருக்குமுள்ள சிநேகம் உலக சம்பந்தமானதேயன்றி தேவ அன்பினாலும் ஆவிக்குரிய ஐக்கியத்தாலும் உண்டானதல்ல. நாம் கிறிஸ்துவை நமது ஜீவனாக ஏற்றுக்கொண்டு அவரை அறிகிற அறிவில் வளருவோமானால், அவரது அன்பினால் நிறைந்து ஆத்ம வாஞ்சைகொண்டிருப்போமானால், சபையாரின் ரட்சிப்பைக் குறித்து அதிகக் கவலையுள்ளவர்களாயிருப்போம். நமது ஊழியத்தின் பலனாக அநேகர் ரட்சிக்கப்படுவார்கள். கிறிஸ்தற்ற குருமாரின் ஊழியத்தில் ரட்சிப்பின் நோக்கம் இராது. வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொள்ளுகிறவர்களின் நோக்கம் அநேகமாய் சம்பாத்

தியமே தவிர நோயாளிகளைக் குணமாக்கும் ஒரே நோக்கமுள்ளவர்கள் அபூர்வம். தேவ ஊழியராகிய நமது நோக்கம் சம்பாத்தியமா யிருக்குமானால், அதுவே நமது கண்ணும் கருத்துமா யிருக்கும்; ஊழியம் கடமையாயிருக்கும். நம்மில் ரட்சிப்பின் மாறுதலோ நிச்சயமோ இல்லாத போது, மற்றவர்களுடைய ரட்சிப்புக்காக எப்படிக் கவலைப்படக்கூடும்? நாம் எவ்வளவு திறமையாக வேலை செய்தாலும் அது மாம்ச முயற்சியே யல்லாமல் ஆவியின் ஊழியமாகாது. உலகத்தில் மனுஷர் நற்பல வேலைகளைச் செய்து வருகிறதுபோல நாமும் செய்து வருகிறோம். ஆனால் அவர்களுக்குள்ள அவ்வளவு ஜாக்கிரதையும் கருத்தும் ஆண்டவர் ஊழியத்தில் நமக்கில்லை. உலகில் பிரயோஜனமற்ற ஊழியனை எஜமான் வைத்திருக்கமாட்டான். கர்த்தருடைய ஊழியத்திலோ உதவாதவர்கள் காலமெல்லாம் இருந்து கெடுக்கிறார்கள்.

இப்படிப்பட்ட குருமார் வேலை செய்த சபைகளில் கிறிஸ்துவின் உத்தம ஊழியர் வருவார்களானால், கிறிஸ்தற்ற சபையார் ஜென்ம சுபாவத்தாரா யிருப்பதால் இவர்களுடைய அருமை அவர்களுக்குத் தெரியாது. முந்தின போதகர்களையும் அவர்கள் பேசின விகடங்களையும் நினைத்து மெச்சுக்கொள்வார்கள். ஆகா, அவர் எவ்வளவு நல்லவர், எவ்வளவு கனிவாய்ப் பேசுவார், இவர் அவரைப்போல் இல்லை என்பார்கள். “தங்கள் இச்சைக்கேற்ற போதகர்கள்” மேல் இவர்களுக்குப் பற்றுதல் அதிகம். ஆவிக்குரிய ஊழியர்களையோ வெறுப்பார்கள். மாம்சத்துக்குரிய யூதர்கள் ஆவிக்குரிய ஆண்டவரை அறியாமல் தானே அவரைப் பகைத்துக் கொன்றார்கள். சபைகளுக்கு ஆண்டவர் தெரிந்தெடுத்து அனுப்பும் ஊழியர்கள் பாக்கியவான்கள். அவர்களை ஏற்றுக்கொள்ளும் சபைகளும் பாக்கியமுள்ளவைகள்.

## 5. குருப்பட்டத்தின் நோக்கம் என்ன?

குருமாரான நமக்கு காலை மாலை ஆராதனைகள் நடத்துவதும், ஞானஸ்நானம் கொடுப்பதும், நற்கருணை பரி



மாறுவதும், கலியாணம் முடிப்பதும், மரித்தவர்களை அடக்கம் செய்வதும், ஜெபக் கூட்டங்களை நடத்துவதுமான பல வேலைகள் உண்டு. இவைகளை ஒழுங்காய் நடத்தும்போது நாம் திருப்தி யடைகிறோம். சபையாருக்கும் தேவ ஊழியம் நடந்தேறுவதாகத் தோன்றும். புறம்பான இவ்வேலைகளை நிறைவேற்றுவதே நமது ஊழியத்தின் முடிவான நோக்கமல்ல. குருப்பட்டம் பெறாத யாராவது ஒரு சகோதரன் இவ்வேலைகளை நம்மை விடத் திறமையாய்ச் செய்யவுங் கூடும். அப்படியானால் அபிஷேகம் பெற்ற குருக்களாக நாம் விசேஷித்துச் செய்கிறதென்ன? “என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்” என்று ஆண்டவர் சொன்னார். பிதா தமது குமாரனை எதற்காக அனுப்பினார்? நம்மைப்போல் ஆராதனைகளை நடத்தும்படிக்கல்ல. பாவிகளை ரட்சிக்கும்படிக்கே அனுப்பினார். ஆண்டவர் உலகத்தில் எத்தனையோ மகத்தான அற்புதங்களை நடப்பித்திருந்தும், உன்னதமான சத்தியங்களைப் போதித்திருந்தும், நமது ரட்சிப்புக்கான வழியை உண்டாக்காமற்போனால் பிதா அவரை அனுப்பின நோக்கத்தில் தவறினவராவார். அதே நோக்கத்துடன் ஆண்டவர் நம்மையும் அனுப்பியிருக்கிறார். சபையார் கிறிஸ்து மூலமாய் ரட்சிக்கப்படும்படி நாம் உழைக்காவிட்டால் நமது வேலைகள் யாவும் வியர்த்தமாகும். நாம் ரட்சிக்கிறவர்கள் அல்ல; கர்த்தரே ரட்சிக்கிறவர். ஆனால் சபையார் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்படும்படிக்கு நாம் அன்போடும் ஆவியின் பலத்தோடும் ரட்சிப்பின் வழியைத் தெளிவாய் எடுத்துக்கூற வேண்டும். உத்தம ஊழியத்தை ஆண்டவர் கூடயிருந்து ஆசீர்வதிக்கிறார். ஆயிரம் ஆராதனைகள் நடந்தாலும் சாத்தான் சட்டைபண்ண மாட்டான். ஆனால் ஒரு ஆத்துமா ரட்சிக்கப்படுவதையோ அவன் சகிப்பதில்லை.

சபையார் ரட்சிக்கப்பட்டு ஆண்டவருக்குப் பிரியமாக நடந்துகொள்ளாததினாலேதான் சபைகளில் குழப்பங்களும், போராட்டங்களும், விரோதங்களும், பிரிவினைகளும் காணப்படுகின்றன. ஆலயம் நிறைய ஜனங்கள் கூடி, ஆரவாரத்தோடு ஆராதிப்பதைக் கண்டு

திருப்தி யடைந்துவிடக் கூடாது. அவர்கள் நடக்கையில் மாறுதலுண்டா? கிறிஸ்துவின் சிந்தை அவர்களில் காணப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். நான் சிறுவனாகச் சேர்ந்திருந்த சபையில் காலை மாலை ஆராதனை ஒழுங்காய் நடக்கும். ஞாயிறுதோறும் நற்கருணை பரிமாறப்படும். பண்டிகைகளும் 'பரிசுத்தவான்கள் திருநாட்களும் சிறப்பாய்க் கொண்டாடப்படும். ஆனால் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்வது, ரட்சிப்பின் மாறுதலடைவது, ஆவியின் வல்லமை பெறுவது, அன்பாய் நடந்துகொள்வது முதலான பிரதான சத்தியங்கள் போதிக்கப்படுவதில்லை. கண்ட பலன் என்ன? சபையார் பற்பல பாவங்களால் மேற்கொள்ளப்பட்டுக் கெட்டார்கள். உலக மக்களானார்கள். கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கத்தின் முடிவு அதுதான்.

## 6. மிஷனெரிகள் வேலை

மிஷனெரிமார் நம் தேசத்தில் செய்துள்ள வேலைகளை மறக்க முடியாது. அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களும், கல்விச்சாலைகளும், ஆஸ்பத்திரிகளும், கைத்தொழிற்சாலைகளும் ஞாபகசின்னங்களாக இருக்கின்றன. மேல் வகுப்பாரால் ஒடுக்கப்பட்டுத் தவித்த குடும்பங்களும், கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்களும் அடைந்த மாறுதல்கள் கொஞ்சமல்ல. மிஷனெரிமார் இவர்களைச் சபைகளில் சேர்த்து, மிகுந்த பணத்தைச் செலவு செய்து கல்வியைப் புகட்டினார்கள். வேத சாஸ்திரத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். மற்றவர்களால் அற்பமாக எண்ணப்பட்ட இவர்களிலிருந்து புறப்பட்ட போதகர்கள் எத்தனை! பிரசங்கிகள் எத்தனை! உபாத்தியாயர்கள் எத்தனை! வைத்தியர்கள் எத்த்னை! சர்க்கார் அதிகாரிகள் எத்தனை! "பழையவைகள் ஒழிந்தன, சகலமும் புதிதாயின." பெற்றுக்கொண்ட கல்விக்கும் சம்பாத்தியத்திற்கும் தக்கபடி உடை நடை பாவனைகளில் மேன்மையும் நாகரீகமும் பெற்றோம். ஓர் காலத்தில் நம்மை அடக்கி ஒடுக்கி அதிகாரத்துடன் வேலை கொண்ட



மேல் வகுப்பார் அதிகாரிகளான நமக்கு முன்பாக வாய் பொத்தி, கைகட்டி, பயபக்தியுடன் நிற்பதும் உண்மையல்லவா? நம்மைத்தேடி வருகிறவர்களும் நமது தயவை நாடி வருகிறவர்களுமான இந்து சிநேகிதர் எத்தனை! இவைகளை நினைக்கும்போது "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று போற்றக் கடனாளிகளாயிருக்கிறோம்.

இது வாழ்க்கையில் முன்னேற்றம். வாழ்க்கையின் முன்னேற்றத்தை பக்தி மார்க்கம் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. அவபக்தர்களான அநேகர் மேலான பதவிகளிலிருந்து செல்வமாய் வாழுகிறதைக் காண்கிறோம். மிஷனெரிமார் குருக்களுடைய ஊழியம் இந்தப் புறம்பான சீர்திருத்தங்களோடு முடிந்துபோகவில்லை. இரட்சகர் இந்தப் புறம்பான அந்தஸ்தையும் நாகரீகத்தையும் கொடுக்கும்படி தமது ஜீவனை விட்டவரல்ல. பணமுண்டானால் இப்படிப்பட்ட முன்னேற்றத்தை யாரிடத்தில் காணலாம். பணம் பாவிகளை ரட்சிக்காது. ஓர் சமயம் ஒரு பிராமண உத்தியோகஸ்தரிடம் கிறிஸ்துவைப்பற்றிப் பேசினபோது அவர்: எங்களுக்கேன் உபதேசிக்கிறீர்கள்? பகவான் செயலால் எங்களுக்கொரு குறைவுமில்லை. அந்தத் தாழ்ந்த வகுப்பாரை வேதத்தில் சேர்த்து, அவர்களை முன்னுக்குக் கொண்டுவாருங்கள் என்றார். அவர் கண்ட கிறிஸ்து மார்க்கம் அவ்வளவுதான். அவரைப்போலவே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் சேர்ந்தால் படிப்பு, உத்தியோகம், பிழைப்பு, கலியாணம் நடக்கும் என்று பொதுவாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். அவைகளல்ல, அவைகளைப் பார்க்கிலும் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம் என்று காட்டவேண்டியது நமது கடமை. அப்படிப்பட்ட ரட்சிப்பின் மாறுதல் நம்மில் உண்டா? இல்லையென்றால் இந்தக் கல்வியும், அந்தஸ்தும், சம்பாத்தியமும் மேட்டிமைக்கும் சகலவித சங்கடங்களுக்கும் ஏதுவாகும். இப்படிப்பட்டவர்களாலே சபைகளில்

குதர்க்கங்களும் பிரிவினைகளும் உண்டாகிறதென்பதை அறிவோம். அந்தஸ்தில் உயர்ந்தோமே தவிர ஆவியில் உயர்ந்தோமில்லை. ஆகையால் மிஷனெரிமார் எவ்வளவுக்குப் புறம்பான நன்மைகளைச் செய்கிறார்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் தங்கள் விசாரணைக்குட்பட்டவர்களின் ஆத்ம ரட்சிப்புக்காக உழைக்கவும் வேண்டும். பற்பல வேலைகளை மேல்விசாரணை செய்வதும், சம்பளம் போடுவதுமே தங்கள் வேலை என்று நினைக்கக்கூடாது. தேவ பக்தியுள்ள ஒரு மிஷனெரி: "வேலைகளை மேல் பார்க்கவும் சம்பளம் போடவுமா நான் சீமையிலிருந்து இந்தியாவுக்கு வந்தேன்? மற்றவர்களை கிறிஸ்துவிடம் நடத்துகிறதற்கல்லவோ நான் என்னை ஆண்டவருக்குப் பிரதிஷ்டை செய்து வந்தேன்" என்று விசனத்தோடே கூறினார். நமதாண்டவர் ஊழியர்களை ஏற்படுத்தி மேல் விசாரணை செய்யும்படி வந்தவரல்ல. அவர் தாமே இடைவிடாது உழைக்கும் ஊழியனாக வந்தார். "நான் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவே வந்தேன்" என்றார்.

## 7. வேறு வேலைகள் கூடாதா?

அப்படியானால் குருப்புட்டம் பெற்றவர்கள் வேறு வேலைகளில் இருக்கக்கூடாதோவென்று கேட்கலாம். தடையின்றி இருக்கலாம். அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் சபைகளில் மாத்திரமல்ல, பற்பல துறைகளிலும் வேலை செய்யவேண்டியது அவசியம். இது அவர்களுக்குப் பெரிய சிலாக்கியம். குருப்பட்டம் பெற்ற மிஷனெரிமார் போதகர்கள், கல்விச் சாலைகளில் உபாத்திமார்களாகவும், கைத்தொழிற்சாலையின் தலைவர்களாகவும், விவசாயத் தொழில் பயிற்றுவிக்கும் உத்தியோகஸ்தராகவும், அச்சு வேலையை நடத்தும் அதிகாரிகளாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் இவ்விதமான வேலைகளில் ஈடுபடுவது தவறென்று நாம் ஒருக்காலும் சொல்ல முடியாது. பவுல் கூடார வேலை செய்யவில்லையா? எல்லாவிடங்களிலும் ஆண்டவருக்குச் சாட்சி



கள் வேண்டும். எல்லாரும் ஆராதனைக்குப் போகிறவர்கள் அல்ல. ஆகையால் ஒரு போதகருக்கில்லாத சிலாக்கியமும் சந்தர்ப்பமும் பற்பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் தேவ ஊழியர்களுக்குக் கிடைத்திருக்கிறது. கூடார வேலை செய்த பவுலுக்கு ஆத்துமாக்கள் ரட்சிக்கப்பட வேண்டுமென்பதுதான் அவர் ஜீவியத்தின் ஒரே நோக்கமாயிருந்தது. நாம் எந்த வேலையிலிருந்தாலும் மற்றவர்களை ஆண்டவரிடம் நடத்தும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கிறிஸ்து நமக்குள் வசிப்பது உண்மையானால் ஆத்ம வாஞ்சை தானாகவே வரும். இதிலே நாம் தவறுவோமானால் மற்ற வேலைகளை நடத்துவதில் நாம் எவ்வளவு சாமர்த்தியமுள்ளவர்களா யிருந்தாலும், ஆண்டவர் அழைத்த அழைப்பும், நாம் பெற்றுக்கொண்ட குருப்பட்டமும் வீணாகும். இப்படிப்பட்ட புறம்பான வேலைகளை மாத்திரம் செய்தால் போதும் என்று நினைப்போமானால் குருப்பட்டம்பெறாத திறமைசாலிகள் நமக்குள் இருக்கவே யிருக்கிறார்கள். ஓர் மிஷன் பாடசாலையில் மாணாக்கருக்கு வேதபாடம் கற்பிக்க இந்து உபாத்தியாயர் ஒருவரை ஏற்படுத்தியிருந்தார்கள். மற்றப் பாடங்களைப்போலவே வேதபாடத்தையும் அவர் திறமையாகக் கற்றுக் கொடுத்தார். ஆனால் மாணாக்கரில் ஒருவரையாவது ரட்சிப்பின் வழியில் அவர் நடத்தினவரல்ல. அவரைக் குற்றப்படுத்த முடியாது. ஏனென்றால் அவர் கிறிஸ்துவை அறிந்தவருமல்ல, ரட்சிக்கப்பட்டவருமல்ல. ஆனால் குரு அபிஷேகம் பெற்றவர்கள் தங்கள் விசாரணைக்குட்பட்டவர்களின் ரட்சிப்புக்காக கவலைப்படாமல், புறம்பான வேலைகளைச் செய்வதே போதும் என்றிருந்தால் அவர்கள் அபிஷேகம் பெற்றது எதற்காக? நாம் எந்த வேலையிலிருந்தாலும் கிறிஸ்துவோடுள்ள அன்பிலும் ஐக்கியத்திலும் நிலைத்திருப்போமானால் நாம் அறியாமலே நமது ஜீவியம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி ஆண்டவர் அருள் செய்வார்.

தேவ ஊழியத்தை நிறைவேற்றும்படி குருப்பட்டம் பெற்றவர்களில் சிலர் உலக விவகாரங்களில் அதிகச்

சிரத்தையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கட்சிகளை வைத்துக்கொண்டு விசாரணை செய்வதிலும், நியாயஸ்தலம் சென்று வழக்காடுவதிலும், வீடுகள் நிலங்கள் வாங்குவது விற்பதிலும் அதிக உற்சாகமுள்ளவர்கள். ஜனங்கள் தங்கள் வழக்குகள் பிராதுகளை எடுத்துக்கொண்டு இவர்களிடம் வந்தவண்ணமாயிருப்பார்கள். கர்த்தருடைய ஊழியத்தைப் பார்க்கிலும் இப்படிப்பட்ட காரியங்களில் இவர்களுக்குப் பிரீதி அதிகம். ஆவிக்குரிய ரட்சிப்பின் வேலையில் இவர்கள் படுமோசம். மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரிய வேலையை எப்படிச் செய்ய முடியும்? இவர்களுக்குள்ள அறிவையும் திறமையையும் நாம் பாராட்டுகிறோம். ஆனால் இவர்கள் தங்களை ஆண்டவருக்குப் பூரணமாய் ஒப்புக்கொடுத்து, தங்கள் வரங்களை சபையாரின் ரட்சிப்புக்கென்று உபயோகிப்பார்களானால் எவ்வளவோ பாக்கியம்! அப்படியில்லையென்றால் இந்த ஊழியத்தை விட்டு விலகி, தங்கள் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேறு வேலைகளைத் தெரிந்துகொண்டு, தங்கள் பிழைப்பை நடத்துவது உத்தமம். அப்படிச் செய்யாமல் கிறிஸ்தற்ற ஊழியர்களாகிய இவர்கள் வழக்கம்போல் வேலை செய்துகொண்டு போவார்களானால் சபைகள் பாழாய்ப் போகும். உத்தம ஊழியர்கள் இருந்து வேலை செய்யவேண்டிய சபைகளில் கிறிஸ்தற்ற குருக்கள் இருப்பதைப்போல் மோசமான காரியம் வேறில்லை. இவர்களைப்போலவே சபையாரும் உலக மக்களாகிறார்கள்.

## 8. குருமாருக்கு இக்காலத்தில் மதிப்பில்லையா?

வேதபாரகர் பரிசேயர் ஜனங்களிடமிருந்து வந்தனங்களையும், ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் "விரும்பினார்கள்" என்பதை ஆண்டவர் கடிந்துகொண்டார். உத்தம ஊழியர்கள் அவைகளை விரும்புவதில்லை. அவர்களுக்கு புகழ்ச்சியும் சரிதான், இகழ்ச்சியும் சரிதான். ஆனால் தேவ ஊழியர்களை மதித்து அவர்களிடத்தில் அன்பாயிருப்பது தேவ மக்களின் லட்சணம்.



அது அவர்களுக்கு ஆசீர்வாதம். குருக்களுக்கு ஓர் காலத்திலிருந்த மதிப்பு இப்பொழுது இல்லை என்பதும் உண்மைதான். அக்காலத்தில் சபையார் தங்கள் போதகர்களைக் காண்பார்களானால்: "ஸ்தோத்திரம் ஐயா" என்று பணிந்து வணக்கம் செய்வதல்லாமல் அதிகம் பேசமாட்டார்கள். போதகர் ஏதாகிலும் விசாரித்தால் ஆணாகிலும் பெண்ணாகிலும் பயபக்தியோடே பதில் சொல்லுவார்கள். குருக்களும் சபையார் மேல் அன்பு வைத்து ஊக்கமாய் வேலைசெய்து வருவார்கள். சபையாருக்கும் போதகருக்குமுள்ள சம்பந்தம் தகப்பனுக்கும் மக்களுக்குமுள்ள சம்பந்தம்போலிருக்கும். குருமாரே சபை காரியங்களில் சகல அதிகாரமுள்ளவர்களாயிருந்தார்கள். கமிட்டித் தொந்தரவுகள் கிடையாது. கலெக்டர், தாசில்தார் முதலான சர்க்கார் உத்தியோகஸ்தருக்குள்ள மதிப்பைவிட சபையார் தங்கள் போதகர்களை அதிகமாய் மதித்து வந்தார்கள். அந்த அருமையான காலம் மறைந்தது. காரணம் என்ன? சபையாரின் மதிப்புக்கு அபாத்திரரான மனுஷர் போதகர்களாக இருப்பதினாலேயா? அல்லது சபையார் கல்வியிலும் சம்பாத்தியத்திலும் உயர்ந்து மேட்டிமை கொண்டதினாலேயா? காரணம் இருபக்கத்திலும் இருக்கலாம்.

சமீபத்தில் நான் ஒரு போதகரைப் பார்த்து: நீங்கள் நல்ல வயதும் பலமும் சுகமுமாயிருக்கிறீர்களே; பின்னை ஏன் வேலையை விட்டு நீங்கினீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்: கமிட்டிமார் கையில் நான் பட்ட பாடு போதுமென்று வேலையைவிட்டு விலகினேன். இப்போது மாதச் சம்பளம் இல்லாதே போனாலும் எவ்வளவோ சமாதானத்தோடிருக்கிறேன் என்றார். கமிட்டிமாராலே சங்கடங்கள் விளைவது போலவே சபையாராலும் குருக்களுக்குச் சஞ்சலங்கள் நேரிடுகின்றன. திருநெல்வேலியில் C. M. S. குருவாகயிருந்து காலஞ்சென்ற தாவீது ஐயர் தம்மை ஒரு மந்தைக்கல் என்று சொல்லுவார். அருத்தமென்னவென்று கேட்டால்: ஊர் மாடுகளை வீடுகளிலிருந்து அவிழ்த்துவிட்டவுடனே அவைகளெல்லாம் சேர்ந்து கிராமத்துக்குச் சமீபமாயுள்ள ஓர் இடத்தில்

மந்தையாகக்கூடும். அங்கே ஒரு கல் நட்டப்பட்டிருக்கும். அங்கே கூடுகிற மாடுகள் நமைச்சலுள்ள தங்கள் உடம்பை அந்தக் கல்லில் தேய்த்துவிட்டு மேய்ச்சலுக்குப் போகும். அதுபோல நான் சபையிலுள்ள பலரும் தேய்க்கும் மந்தைக்கல் போலிருக்கிறேன் என்பார். யாழ்ப்பாணத்தில் கல்விமானான ஒரு போதகர் இருந்தார். அக்காலத்தில் அவரோடே நான் பேசிக்கொண்டிருக்கையில் அவர் பெருமூச்சுவிட்டு: நான் ஒரு கால்பந்து என்றார். அது என்னவென்று கேட்டதற்கு அவர்: பிள்ளைகள் கால்பந்து உதைத்து விளையாடுகிறதில்லையா? அந்தப் பந்து எப்பக்கம் போனாலும் உதைக்குத் தப்பாது. அதேபோல சபையிலுள்ள பலராலும் நான் உதைபடுகிறேன் என்றார். ஐயோ, பரிதாபம்!

ஒரு பெரிய சபையில் பணச்செருக்குள்ள ஒரு தலைவர் இருந்தார். அவர் தெய்வ பயமற்றவர். அவருடைய மனைவி வியாதியாயிருந்தது. போதகர் அந்தம்மாளைப் பார்க்கும்படி வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவர் போதகரைப் பார்த்து: மனுஷா, இப்போத்தானா உன் கண் திறந்தது? அம்மா வியாதியாயிருக்கிறார்களே, உடனே வந்து பார்க்கக்கூடாதா? நான் கொடுத்துத்தானே, நீ தின்னனும் என்று பலவாறாய்த் திட்டினார். சற்று பொறுத்து போதகர் முழங்கால் படியிட்டு கண்ணீர் சிந்தி ஜெபம் பண்ணினார். தன் மனைவிக்காகக் கண்ணீர் விடுகிறாரென்று ஐயா நினைத்துக்கொண்டார். போதகரோ, இந்த வேலை செய்வதில் இப்படியெல்லாம் ஏச்சுப் பேச்சுக் கேட்கவேண்டியதிருக்கிறதே கடவுளே! என்று உள்ளம் உடைந்து கண்ணீர் விட்டழுதாரேயல்லாமல் மற்றப்படியல்ல. இந்த விஷயத்தை அந்தப் போதகரே எனக்குச் சொன்னார். ஒரு குருவைப் பார்த்து: உங்கள் மக்களில் யாராவது குரு வேலைக்கு வருகிறார்களாவென்று கேட்க, அவர்: எனக்கு விருப்பந்தான், ஆனால் என் மக்கள் என்னைப் பார்த்து: அப்பா, நீங்கள் சபையில் படுகிற பாடுகளைக் கண்டபின் நாங்கள் எப்படி அந்த வேலையை விரும்புவோம் என்கிறார்கள் என்றார். கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கமே இவ்வளவு கேட்டுக்கும் நிந்



தைக்கும் காரணம். யாருக்குள் தெய்வ பயமில்லையோ அவர்கள் மனுஷரை மதிக்கமாட்டார்கள். அந்த அநீதியுள்ள நியாயாதிபதியைப்போல "தேவனுக்கு பயப்படாதவர்களும் மனுஷரை மதியாதவர்களுமான" ஆட்கள் சபைகளில் இருக்கிறார்கள். அவர்களால் உண்டாகும் குழப்பங்களும் கலகங்களும் மிகுதி.

போதகர்கள் சகலத்தையும் சகிப்பவர்கள் என்பதினாலே சபையார் அவர்களுக்கு விரோதமாக எதையும் பேசலாம், எதையும் செய்யலாம் என்று துணிவு கொண்டிருக்கிறார்கள். நமது பொறுமையைக் கோழைத்தனமென்று நினைக்கிறார்கள். நான் சிறுவனாயிருந்தபோது தடிக்கம்புப் போதகர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு விரோதமாக யாராவது எழும்பினால், தங்கள் அங்கியையும் அங்கியின்மேல் கட்டியிருக்கும் கறுப்புக் கயிற்றையும் கழற்றி ஓரிடத்தில் வைத்துவிட்டு, ஐயர்ப் பட்டமே! கொஞ்ச நேரம் நீ இங்கேயிரு என்று சொல்லி, தடிக்கம்பை எடுத்துக்கொண்டு: யார் பேசினவன்? இப்போ வந்து பார் என்று கர்ச்சிப்பார்களாம். அப்படிப்பட்ட தடிக்கம்புக் கிறிஸ்து மார்க்கம் இக்காலம் இல்லை. நாம் அப்படிச் செய்கிறதாயிருந்தால் அது ஆண்டவர் சிந்தைக்கு விரோதமும், தீமையைச் சகித்துக்கொள்ளவேண்டுமென்று நாம் போதிப்பதற்கு விரோதமாகவுமிருக்கும். போதகர் ஊழியத்தில் பாடுகள் இருப்பதுபோலவே, தேவமக்கள் மூலமாய் அவர் அருளும் ஆறுதல்களும் உண்டு என்பது நிச்சயம்.

## 9. குருக்களும் பாடுள்ள மனுஷர்தானே

போதகர்கள் பரத்திலிருந்து தோன்றிய அசரீரிகள் அல்ல. அவர்கள் சபையாரைப்போலவே பாடுள்ளவர்கள். அவர்களுக்கும் பலவித கவலைகளும் கஷ்டங்களும் உண்டு. என்றாலும் அவர்கள் சோர்ந்து போகாமல் ஆண்டவருடைய வேலையை உத்தமமாய் ஒழுங்காய் நிறைவேற்றவேண்டியவர்கள். தங்கள் ஊக்கமான ஊழி

யத்தால் ஆலயத்தில் கூடிவரும் பல நிலைமையுள்ள ஜனங்களை கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டவேண்டியவர்கள். தங்களுக்குள்ள குடும்பக் கஷ்டங்களை தேவபலத்தால் சகித்துக்கொண்டு, அவருடைய கிருபையைச் சார்ந்து, பற்பல கவலைகளாலும் பாடுகளாலும் மனஞ்சோர்ந்து தவிக்கும் மக்களை, தங்கள் ஊக்கமான ஜெபத்தாலும் திருவசனப் போதனையாலும் உயிர்ப்பித்து, அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தவேண்டியவர்கள். கவலையோடும் மனவேதனையோடும் ஆராதனைக்கு வந்தவர்கள் மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் வீடுகளுக்குத் திரும்பும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு ஆராதனையும் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கவேண்டும். போதகர்கள் இவ்விதமான பலனுள்ள ஊழியஞ் செய்வதற்கு தேவகிருபையும், சபையாருடைய அன்பும் அனுதாபமும் அவசியம். இதை மறந்து யாராவது சபையில் குழப்பங்களையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்களானால் உத்தம ஊழியர்கள் எவ்வளவோ வேதனையோடும் பெருமூச்சோடும் கண்ணீரோடும் வேலைசெய்ய வேண்டியதாயிருக்கும். "அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" என்கிறார் (எபி. 13: 17). "கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கும்." "ஒரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்பட நேரிடும்." எல்லாருமல்லவே, சில துஷ்டராலேதானே சபையில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. இது மிகவும் பயங்கரமான விஷயம்! நமது பலவீனங்களை, பாவங்களை அநேகமாய்ப் பொறுத்துக்கொள்ளும் தேவன் தமது ஊழியருக்கும் ஊழியத்துக்கும் இடைஞ்சல் உண்டாக்குகிறவர்களை தப்பவிட மாட்டார். "பக்தர், சித்தர், பரமஞானிகள் சித்தம் கலங்கிட தீவினை மூண்டிடும்" என்னும் சொல் பொய்யல்ல. சூரிய உஷ்ணத்தில் மைல்கணக்காய் நடக்கலாம்; சூரிய உஷ்ணம்பெற்ற மணலிலோ சூடு பொறுக்காமல் துள்ளிவிழ நேரிடும். மோசேக்கு எதிர்த்து நின்ற ஜனங்களைப்பற்றித் தேவன் சொன்னதென்ன? "கொஞ்



சம் விலகு மோசே, ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன்" என்றார். அப்படியே செய்தார்.

குருக்களை அதிகமாய் மதித்து அவர்களிடம் எப்போதும் பக்திவிநயமாய் நடந்துகொள்ளும் ஒரு சகோதரனை அறிவேன். யாராவது ஒருவர் போதகர்களைக் குறைவாய்ப் பேசினால் அவர் சகிக்கமாட்டார். எந்தச் சபையைச் சேர்ந்த போதகரென்றாலும் சரி, எல்லாரிடமும் அவருக்கு குரு பக்தி உண்டு. குருக்களில் உத்தமர்கள் இருப்பதுபோல உதவாதவர்களும் இருக்கிறார்களே என்று யாராகிலும் சொன்னால், அதைப்பற்றி உனக்கென்னையா? நல்லவரானாலும் கெட்டவரானாலும் ஆண்டவருக்கல்லவோ அவர் உத்திரவாதி. நீ அவருக்கு எதிர்த்து நின்று உன்னை ஏன் கெடுத்துக்கொள்ளுகிறாய்? நீ தாயின் வயிற்றில் இருந்தபோது சுகமான பேறுகாலத்துக்காக அவர் ஜெபித்தார். நீ குழந்தையாயிருந்தபோது உன்னைக் கையிலேந்தி ஞானஸ்நானம் கொடுத்தார். உனக்குத் திடப்படுத்தல் பாடம் கற்றுக்கொடுத்தார். உன்னை நற்கருணையில் சேர்த்தார். உனக்கு நிச்சயார்த்தம் செய்துவைத்தார். உன் கலியாணத்தையும் முடித்துவைத்தார். உத்தியோக சம்பந்தமாய்சிபாரிசுக் கடிதம் எழுதிக்கொடுத்தார். சந்தோஷ துக்க காலங்களில் உன் வீட்டுக்கு வந்து ஜெபித்து ஆறுதல்படுத்தினார். நீ மரிக்க நேரிட்டால் ஜெபம் செய்து மரியாதையாக அடக்கம் செய்பவரும் அவரே. இவ்வாறு முதலிருந்து கடைசிவரை சகல காரியங்களையும் உனக்காக நடத்திவைக்கும் உன் ஞானத் தகப்பனுக்கு விரோதமாக நீ எழும்புவதும் பேசுவதும் சரியா என்று கேட்பார். போதகர்களை நேசித்து ஊழியத்தில் அவர்களை உற்சாகப்படுத்துகிறவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெறுகிறார்கள் என்பதும், அவர்களைப் பகைத்து, மனங்கலங்கவைத்து, ஊழியத்துக்கு இடையூறு செய்கிறவர்கள் கர்த்தரால் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதும் சபைகள் திட்டமாயறிந்த விஷயம். அவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்ளுகிறார்கள்.

# 10. சபை உத்தியோகஸ்தர்

சபைகள் வெகுகாலமாக மிஷனெரிமார் பார்வையிலிருந்தன. அவைகள் சுய ஆதரவும் சுய ஆளுகையுமுள்ளதாக வேண்டுமென்று முயற்சி எடுத்ததின்பேரில் பல சபைகள் சுயாதீனம் பெற்றன. இந்தச் சுயாதீனம் கிறிஸ்துவுக்குள்ளானதாயிருந்தால் நல்லது. இல்லையானால் சபைகளில் குழப்பங்களும் பல சங்கடங்களும் ஏற்படும். குருக்களோடுசேர்ந்து சபையின் காரியங்களைக் கவனித்து நடத்த சபைக் கமிட்டிகள் ஏற்பட்டன. கமிட்டி அங்கத்தினர் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்தால் சபைக்கு எவ்வளவோ ஆசீர்வாதமாயிருப்பார்கள். பொதுவாய் அப்படி வாய்க்கிறதில்லை. சபையார் தங்கள் இஷ்டத்துக்கேற்ற போதகர்களைத் தெரிந்துகொள்வதுபோல கமிட்டி அங்கத்தினரும் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் தங்களுக்கு அதிக ஓட்டுகள் கிடைக்கும்படி கையாடும் முறைகளும் எடுத்துக்கொள்ளும் பிரயாசங்களும் இவ்வளவு அவ்வளவல்ல. சட்டச்சபையிலும் நகரச்சபையிலும் தேர்தல் நடக்கும் காலத்தில் தேர்தலுக்கு நிற்பவர்கள் பணங்களைச் செலவு செய்து ஓட்டர்களைச் சம்பாதிப்பதும், கார்களில் அவர்களை ஏற்றிக்கொண்டுபோவதும் எப்படி வழக்கமோ, அதேமாதிரி நமது சபைகளிலும் நடப்பது எவ்வளவு விசனமான காரியம்! தேவபக்தியுள்ளவர்கள் தங்களைச் சபை உத்தியோகஸ்தராகத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆத்திரப்படமாட்டார்கள். நாம்தான் அவர்களை வருந்தி அழைக்கவேண்டும். அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டால் சபையின் நல்வாழ்வுக்காக போதகரோடு சேர்ந்து உழைப்பார்கள். தெரிந்துகொள்ளப்படவில்லையென்றால் தேவ சித்தத்திற்குக் கீழடங்கி எப்போதும்போல அமைதியாய் நடந்துகொள்வார்கள். கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களோ தேர்தலில் தாங்கள் தவறிப்போனதற்காக எரிச்சலடைந்து சபையில் குழப்பத்தையும் பிரிவினைகளையும் உண்டாக்குவார்கள். சபையை விட்டுப் பிரிந்தும் போவார்கள். கமிட்டி மெம்பர்கள் போதகர்



களை உற்சாகப்படுத்தி அவர்கள் ஊழியத்திற்கு ஆதாரவாயிருக்கவேண்டியவர்கள். எல்லாரும் அப்படி நடக்கிறதில்லை. போதகர்களை ஆளவேண்டும், அவர்களை ஆட்டிவைக்கவேண்டும் என்கிற நோக்கங்கொண்டவர்கள் சபைகளில் இருக்கிறார்கள். சபைகளெங்கும் போதகர்களுக்கும் கமிட்டிமார்களுக்குமுள்ள போராட்டத்தை இங்கே எடுத்துக்கூற இடமில்லை. ஆராதனையில் போதகர் தமது பிரசங்கத்துக்கு ஏற்ற ஞானப்பாட்டை அறிவிக்க, கமிட்டி மெம்பர் ஒருவர் கின்னரக்காரரிடம்போய் வேறு ஞானப்பாட்டை வாசிக்கச் செய்தார். எவ்வளவு துணிகரம்! கோவில் ஊழியர்களான உபதேசிமார், உபாத்திமார், கோவில் பியூன், தோட்டக்காரன் முதலானவர்கள் தங்கள் பிழைப்புக்காக சந்தர்ப்பம்போல் சாய்கிறவர்கள். கமிட்டிமாரின் கை பலமாயிருந்தால், போதகர் அவர்களுக்கு அடங்கியிருக்கிறார் என்று கண்டு கமிட்டிமார் தயவைச் சம்பாதிக்கப் பார்ப்பார்கள். போதகரைப்பற்றிக் கமிட்டிமாருக்குச் சொல்லி அவர்களுடைய அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். இந்தத் தைரியத்தினால் ஆலய வேலைக்காரர் போதகர்களை மதிப்பதில்லை.

ஏழைகளாயினும் தேவ பக்தியுள்ளவர்களை உதவிக்காரராகத் தெரிந்தெடுப்பது நல்லது. அப்படிச் செய்யாமல் பணக்காரர், கல்விமான்கள், உயர்ந்த உத்தியோகஸ்தர் முதலானவர்களை நியமிப்பது சபைகளுக்கு வழக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட பெரியோர் தேவ பக்தர்களாயிருந்தால் எவ்வளவோ பாக்கியம்! எல்லாரும் அப்படி இல்லை. இவ்வாறு தெரிந்துகொள்ளப்படும் கனவான்கள் போதகர்களைப் பார்க்கிலும் சகல விஷயத்திலும் மேலான அந்தஸ்துள்ளவர்களாயிருப்பதாலும், சபைக் காரியங்கள் இவர்கள் விசாரணைக் குள்ளிருப்பதாலும் இவர்கள் தயவு போதகருக்கு வேண்டியதாயிருக்கிறது. இவர்களால் தங்களுக்கு எந்தவகையிலும் கஷ்டம் நேரிடாதபடி போதகர்கள் இவர்களுக்குப் பிரியமாய் நடந்துகொள்ளவேண்டியதிருக்கிறது. அதிகாரிகள் குடும்பங்களை அடிக்கடி சந்திக்கவேண்டும். அதுபோலவே அதிகச்

சங்கப்பணம் கொடுக்கிற தனவந்தர் குடும்பங்களையும் ஒழுங்காய்ச் சந்திக்கவேண்டும். அவர்கள் கோபித்துக் கொண்டால் சபை வருமானம் குறைந்துபோகும். ஆங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த ஒரு போதகர் என்னைப் பார்த்து: "பக்தியாவது ஒண்ணுவது, பணம் பிரிப்பதிலேயே எங்கள் பிராணன் போகிறது. எந்தக் குரு அதிகப்பணம் சேகரிக்கும் திறமையுள்ளவரோ அவரே சிறந்த தேவ ஊழியன் என்பது கண்காணிமார் எண்ணம்" என்றார். ஆகவே சபை வருமானத்தினிமித்தம் போதகர்கள் கமிட்டிமார்களிடமும், பணக்காரரிடமும், சபையாரிடமும் பக்குவமாய் நடந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதுவா கர்த்தருடைய ஊழியம்?

இவைகளைக் கவனிக்கும்போது தேவனைச் சேவிப்பதிலும் மனுஷனைச் சேவிப்பதே பிரதானமாகத் தோன்றுகிறது. "நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷ்ரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே" என்கிறார் பவுல் (கலாத். 1:10). சபை வேலை நடப்பதற்கு பெரிய மனுஷாளுடைய ஆதரவு வேண்டியதிருப்பதால் அவர்களைப் பிரியப்படுத்தும்படியான சோதனை அல்லது பலவீனம் குருமாருக்குண்டு. சர்க்காரில் உயர்ந்த பதவியிலிருந்தவரும் அவர் மனைவியாரும் ஒரு சபையில் அங்கங்களாயிருந்தார்கள். அந்தச் சபைக் குருவின் கவனமெல்லாம் அவர்கள் பேரிலேயே இருக்கும். அவர்களை அடிக்கடி சந்திப்பார். அவர்கள் ஆராதனைக்கு வந்தால் ஆசனத்தில் வெகுநேரம் உட்கார்ந்திருப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்று போதகர் தமது பிரசங்கத்தை பதினைந்து நிமிஷத்தில் முடித்துவிடுவாராம். இதை அந்தச் சர்க்கார் உத்தியோகஸ்தரே ஒரு கூட்டத்தில் சொல்லிப் போதகரைப் புகழ்ந்து பேசினதை நான் கேட்டேன். மேலும் சபையில் முக்கியஸ்தரான ஆணோ பெண்ணோ மரித்தால் குடும்ப ஆறுதலுக்காகவும், ஞாபகார்த்தமாகவும் ஜெபக்கூட்டங்கள் வைப்பதுண்டு. இறந்தவர்களிடம் எத்தனை குற்றம் குறைவுகள் இருந்த



போதிலும், அவர்கள் கிறிஸ்தற்றவர்களாகவே மரித்திருந்தபோதிலும் வீட்டாரைத் பிரியப்படுத்தும்படி அவர்களை அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து பேசும் சோதனையும் பலவீனமும் போதகர்களுக்கிருக்கிறது. இறந்துபோனவர்கள் ரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் என்பது எல்லாரும் அறிந்த விஷயமானால் அவர்களில் காணப்பட்ட நற்குணங்களை எடுத்துப்பேசலாம். ஆனால் இப்படிப்பட்ட ஜெபக்கூட்டங்களில் இறந்துபோன ஆட்களைப்பற்றி அதிகமாய் வர்ணிப்பதைவிட கிறிஸ்து பாதத்தில் வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதையும், விசுவாசிகள் அழிந்துபோகாமல் அவரிடம் பத்திரமாகயிருக்கிறார்கள் என்பதையும், அந்த நித்திய மகிமையில் பிரவேசிப்பதற்கு இங்கே நாம் தகுதியுள்ளவர்களாகவேண்டும் என்பதையும்பற்றிப் பேசி ஜெபித்தால் எல்லாருக்கும் அது ஆசீர்வாதசெய்தியாயிருக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதலாயிருக்கும், ஆண்டவருக்கும் பிரியமாயிருக்கும். நரஸ்துதியும் வீண்புகழ்ச்சியும் தேவ ஊழியருக்குத் தகாது. ஆலய ஆராதனை முடிந்தவுடனே முந்தித் தனவந்தவர்களிடம் ஓடி, கைகுலுக்கிப் பேசுவதும் நமக்கு வழக்கம். தேவ மக்கள் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும் அவர்களையே நாம் பிரதானமாய்த் தேடி, பட்சமாய்ப் பேசி அனுப்பவேண்டும். இவ்விதமான பட்சபாதத்தை யாக்கோபு பலமாய்க் கண்டிக்கிறார். ஆண்டவரும் தேவாலயத்தில் தாம் கண்ட ஐசுவரியவான்களையல்ல, அந்த ஏழை விதவையைப் புகழ்ந்து பேசினார். வேலை கர்த்தருடையது. நமது கண்கள் கர்த்தரையே நோக்கியிருந்தால் அவர் தமது வேலையைக் கைவிடமாட்டார்.

## 11. ஆலோசனைச் சங்கமும் சபைகளும்

சபைக் கமிட்டிகளுக்கு மேலாக ஆலோசனைச் சங்கம் இருக்கிறது. இது வருஷந்தோறும் கூடி சபைகளுக்குரிய காரியங்களை ஆலோசிக்கும். போதகர்களை ஏற்படுத்தல், மாற்றுதல், சம்பளம் விதித்தல், சிக்கலான விஷயங்களை

ஆலோசித்தல் முதலான பல வேலைகள் இச்சங்கத்துக்கு உண்டு. இவ்வாறு பலவருஷங்களாகக் கூடி எத்தனையோ விஷயங்களைக்குறித்து ஆலோசனை செய்துவந்தபோதிலும் சபைகளின் ஆவிக்குரிய நிலைமையோ பரிதாபமாகவே இருக்கிறது. கேடு பெருகிக்கொண்டே போகிறது. மனுஷர் திருடினால் அல்லது கலகஞ்செய்தால் சர்க்கார் அவர்களைப் பிடித்துத் தண்டிப்பார்களே தவிர, அவர்கள் கடவுள் பக்தர்களாய் நடக்கவேண்டுமென்று ஞானோபதேசம் செய்வது சர்க்கார் வேலையல்ல. நமது காரியமோ வேறு. சபைகளின் ஆவிக்குரிய காரியங்களைப் பிரதானமாய்க் கவனிக்கவேண்டியது ஆலோசனைச் சங்கத்தின் கடமை. ஆலோசனைச் சங்கம் ஆவிக்குரியதாயிருந்தால் சபைகளும் ஆவிக்குரியதாயிருக்கும். ஆலோசனைச் சங்கத்தார் தங்கள் இஷ்டப்படி வேலைகளை நடத்தப் பார்ப்பார்களானால் காரியம் வாய்க்காது. மேலும் சங்கத்துக்கு வருகிறவர்கள் அநேகமாய் மிஷனெரிமார் கையின்கீழ் வேலை செய்கிறவர்களாயிருக்கிறோம். தர்க்கிக்கும் ஒரு விஷயத்தில் நமது நியாயம் எப்படி இருந்தபோதிலும் அதிகாரிகளின் நோக்கத்திற்கு இணங்கிப்போகவேண்டியதாயிருக்கிறது. மனுஷன் பெட்டியைச் செய்வான் மரத்தை உண்டாக்க அவனால் ஆகுமா? ஆகாது. மனுஷன் குளத்தை வெட்டுவான், மழையை உண்டாக்க அவனால் ஆகுமா? ஆகாது. ஆலோசனைச் சங்கம் பல கமிட்டிகளை ஏற்படுத்தி எவ்வளவு திறமையோடும் யூகத்தோடும் காரியங்களை நடத்தினாலும் கர்த்தர் கூடயிருந்து தமது ஆவியினால் போதித்து நடத்தாவிட்டால் நமது ஆலோசனைகள் விருதாவாகும். ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை? பெருதவர்கள் எத்தனை? இராப்போஜனக்காரர் எத்தனை? பிள்ளைகள் எத்தனை? சபை பராமரிப்புக்காக சபையார் கொடுப்பதெவ்வளவு? மிஷன்காரர் கொடுப்பதெவ்வளவு? ஐரோப்பியர் கொடுப்பதெவ்வளவு? மற்றவர்கள் கொடுப்பதெவ்வளவு? காலமெல்லாம் இவ்வாறு கணக்குப் பார்த்து என்ன பலனைக் கண்டோம்? நடபடிப் புஸ்தகத்தில் மூவாயிரம் ஐயாயிரம் என்று தொகை வருகிறது மெய்தான். ஆனால் அது ரட்சிக்கப்பட்டவர்



களின் தொகையேயல்லாமல் பணக்கணக்குமல்ல, மற்றக் கணக்குமல்ல.

சபைகளில் ஞான ஜீவன் இல்லை, வல்லமை இல்லை, அன்பில்லை, சகோதர ஐக்கியமில்லை, ஆத்தும வாஞ்சை இல்லை. பற்பல பாவங்களாலும் கவலைகளாலும் மேற்கொள்ளப்பட்டுத் தவிப்பவர் அநேகர். நிர்விசாரிகள் ஏராளம். தேவகுமாரன் எதற்காகப் பாடுபட்டு மரித்தாரோ அந்த நோக்கம் சபைகளில் நிறைவேறாவிட்டால் இப்படிப்பட்ட சபைகளால் ஆண்டவருக்கு அவமானமே தவிர மகிமையில்லை. இதற்குப் பரிகாரம் தேடாவிட்டால் நமது அலுவல் கூட்டங்கள் யாவும் வீண் பிரயாசங்களாகும். நமது ஜீவியத்தை மாற்றி நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும்படிக்கே ஆண்டவர் தமது ஜீவனைக் கொடுத்தார். பாவங்களால் உண்டான கேடுகளுக்கு நாம் தப்பி, திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக வேண்டுமென்பதே ஆண்டவரும் அவரடியார்களும் போதித்த முக்கிய போதனை. இவ்வாறு நமது ஜீவியம் மாற்றப்படாததினாலேதான் சகலவித குழப்பங்களையும் போராட்டங்களையும் அடிதடிகளையும் சபைகளில் காண்கிறோம். போலீஸ் பந்தோபஸ்தில் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. எவ்வளவு அவமானம்! சபைகள் பக்தி விருத்தியடைந்து வளருமானால் ஆலோசனைச் சங்கத்துக்கு அதிக வேலையிராது. சங்கம் கூடும் மூன்று நாட்களில் தேவ சமுகத்தில் நாம் கூடி, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிப் பேசி, புதுப் பலத்தோடே திரும்பிப் போகலாம். "சபைக்கடுத்த பல கவலைகளோடே நாங்கள் இங்கே வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தும் கவலைகளோடேயே சபைகளுக்குத் திரும்பிப்போக வேண்டியதாயிருக்கிறது" என்று ஒரு போதகர் புலம்பிச் சொன்னார். ஒருவன் தன்னிடத்தில் இல்லாததை எப்படிக் கொடுப்பான்? சங்கத்தை நடத்தும் தலைவர்கள் ஆவிக்குரிய பக்தர்களாயிருந்தால் கூட்டம் எல்லாருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். நமது ஆலோசனைச் சங்கத்தின் நடபடிகள் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்கிறதா? பல வருஷங்களாக இராப்பகலாய் எழுதிவைத்திருக்கும்

மினிட்டுப் புஸ்தகங்களின் குவியல்களைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைகிறாரா? கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கத்துக்கு எவ்வகையிலும் சுகமேயில்லை. சபைகளிலுள்ள குறைவுகளை விசாரித்து ஆலோசனை சொல்லும்படி சங்கப் பிரதிநிதிகள் வரும்போது: இதோ ஆண்டவருடைய அடியார் நம்மிடம் வருகிறார்கள், அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு, அவர்கள் ஆலோசனையை மதிப்புடன் கேட்போம் என்று சபையார் அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கவேண்டியது நியாயம். தற்காலமோ அப்படியல்ல. சபைகளைச் சந்திக்க வருகிறவர்கள் துக்கத்தோடே திரும்பிப்போக வேண்டியதாயிருக்கிறது. ஆலோசனைச் சங்கம் பலவிதத்திலும் தத்தளிக்கிறது. எவ்வளவுக்குச் சட்டங்களும் விதிகளும் பெருகுகிறதோ அவ்வளவுக்கு மீறுதலும் எதிர்ப்பும் பெருகுகிறது. ஆலோசனைக் கூட்டத்தில் அடிக்கடி எழுந்து பேசும் நிபுணர்கள் இருக்கிறார்கள். தேவ ஊழியத்திலோ இவர்கள் முழுமோசம். நமது சபைகளையும் சபையின் காரியங்களையும் ஆண்டவருடைய ஆலோசனைக்கும் நடத்துதலுக்கும் ஒப்புக்கொடாமல் நமது தலைமையை நிலைநாட்டுவோமானால் கடைசிவரை சபைகளில் தொந்தரவுகள் இருந்துகொண்டே யிருக்கும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பிரதானமாகத் தேடாமல் விதிகளையும் சட்டங்களையுமே அச்சிட்டுக்கொண்டிருந்தால் தீமைகள் ஒழியப்போவதில்லை.

## 12. தென் இந்திய சபை

வெகுகாலமாக எதிர்பார்த்த சபை ஐக்கியம் 1947-ம் வருஷம் செப்டம்பர்மீ கைகூடிவந்தது சந்தோஷமான காரியம். ஐக்கியம் யாவராலும் விரும்பப்படத்தக்கது. இதிலே தென் இந்திய ஐக்கிய சபைகள், மெதடிஸ்துச் சபைகள், இங்கிலாந்து சபைகள் ஒன்றாகச் சேர்ந்தன. இந்த ஐக்கியம் எப்படிப்பட்டது? இந்த ஐக்கியத்துக்காக உழைத்தவர்கள் ஆண்டவர் ஒற்றுமைக்காக ஜெபித்த வசனங்களை மேற்கோளாக அடிக்கடி எடுத்துப் பேசினார்



கள். இரட்சகர் பிதாவை நோக்கி: "பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவேண்டும்" என்றும், "நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கவேண்டும்" என்றும், "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும்" என்றும் திரும்பத் திரும்பச் சொல்லி ஜெபித்தார். ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் எப்படிப்பட்டது? நாம் கொண்டாடுகிற ஐக்கியம் எப்படிப்பட்டது? உலகத்தில் ஐக்கிய சங்கங்கள் பல உண்டு. அவர்கள் நிருவகிக்கும் காரியங்களிலேதான் ஐக்கியமே தவிர, அங்கத்தினருக்குள் அன்போ ஐக்கியமோ இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. அதுபோல நாமும் சபை ஆளுகை, ஆராதனைகள், கொள்கைகளில் ஐக்கியத்தைத் தேடுவோமானால் ஆண்டவர் செய்த ஜெபத்தை ஆதாரமாக எடுத்துப் பேசுவது சரியல்ல. ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் ஆட்களைப்பற்றினது. "நம்மைப்போல்," "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல்" அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கவேண்டும் என்கிறார். ஆராதனைகள், கொள்கைகள், ஆசாரங்களைப்பற்றி ஒரு வார்த்தை கிடையாது. பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள ஐக்கியம் மகா ஆழமானது, அன்புக்குரியது, ஆவிக்குரியது, ஜீவனைப்போன்றது. அதேமாதிரி ஐக்கியம் விசுவாசிகளான நமக்குள்ளும் உண்டாகவேண்டுமென்பது அவரது ஊக்கமான வேண்டுதல். இது ஒரேநாளில் ஆகிற காரியமல்ல. கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள ஐக்கிய அளவுக்குத்தக்கபடி நமக்கும் உடன் விசுவாசிகளுக்கும் ஐக்கியமுண்டாகும். இந்த அன்பின் ஐக்கியத்தையே நாம் பிரதானமாகத் தேடவேண்டும். மற்றப்படி ஆயிரம் சுன்னங்கள் ஒன்று சேர்ந்தாலும் சுன்னங்களாயிருப்பதுபோல, புறம்பான காரியங்களில்மாத்திரம் நாம் ஐக்கியப்படுவோமானால் அது ஆண்டவர் பார்வையில் ஐக்கியமாகாது.

ரோமைச் சபைகள் உலகமெங்கும் திரளாய்ப் பெருகியிருக்கின்றன. அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை என்னமாயிருந்தபோதிலும், போப் பாண்டவன் தலை

மைக்குள் இவைகளிருப்பதால் ஒரே சபை என்றெண்ணப்படுகிறது. இவர்கள் ஒற்றுமை ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஒற்றுமையா? ஆங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த குருக்களில் ஒரு வகுப்பாருக்கு ரோமைச் சபையோடு சேர்ந்துகொள்ள வெகு ஆசை. இதற்காக இவர்கள் ரோமைச் சபைக் குருக்களைப்போல் உடைகள் உடுத்தி, அவர்களைப்போல் ஆராதனையும் நடத்தினார்கள். இவர்களுக்கு ஆங்கில கத்தோலிக்கர் என்று பெயர். ஆண்டவன் சாமிக்கோ இவர்களைச் சேர்த்துக்கொள்ள மனமில்லை. கத்தோலிக் சபைகளுக்கும் மற்ற சபைகளுக்கும் கிறிஸ்து ஒருவரே ரட்சகராயிருந்தும் அவர்கள் பார்வையில் நாம் பதிதர்களாக எண்ணப்படுவது எவ்வளவு துயரமான காரியம்! ஆத்மீக விஷயத்தில் இந்துக்களோடாவது நாம் தாராளமாகச் சம்பாஷிக்கலாம்போலிருக்கிறது. கத்தோலிக் சபைகளோடு சம்பந்தப்படுவது அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. சில வருஷங்களுக்குமுன் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த ஓர் ஆலயத்தில் இராப்போஜன ஆராதனை நடந்தபோது போதகர்களின் உடைகள், நற்கருணைப் பதார்த்தங்கள், அவைகளைப் பரிமாறின முறைகளை நான் கவனித்து: ஆராதனைகள் வெகு சாதாரணமாக நடக்கும் இவ்வாலயத்தில் இந்த மாறுதல்கள் எப்படி வந்ததென்று கேட்க அவர்கள்: நாம் இங்கிலாந்து திருச்சபையோடு ஐக்கியமாகும்படி இப்போதே ஆயத்தப்படுகிறோம் என்றார்கள். ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் எப்படிப்பட்டது? இவர்கள் தேடின உடுப்பு ஐக்கியம் எப்படிப்பட்டது? அன்பனாகிய யோவான்: "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்கிறார். வேறே புறம்பான ஆசாரங்கள் கொள்கைகளைப்பற்றி யோவான் ஒன்றுமே பேசவில்லை.

பல சபைகள் சேர்ந்து தென் இந்திய சபை என்னும் பேரால் இன்று அழைக்கப்பட்டபோதிலும் கஷ்டங்கள்



நீங்கினபாடில்லை. தாங்கள் பிறந்து வளர்ந்த கோவிலை விட்டு வேறொரு சபையில் சேர்ந்து ஆராதிப்பது கஷ்டமாகத்தானிருக்கிறது. ஐக்கிய சபைகளில் ஒன்று நீண்ட காலமாகப் பிடித்திருந்த கொள்கைகளைத் தள்ளிவிட்டு மற்றச் சபையின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது கஷ்டம்தான். இதனாலேதான் "நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுங்கள், நாங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கிறோம்" என்று பேரம் பேசவேண்டியதாயிற்று. சபைகளில் பல வித்தியாசங்கள் இருந்தபோதிலும் அன்பினால் நிறைந்த தேவ மக்களுக்கு மற்ற விசுவாசிகளோடு ஐக்கியப்படுவது கஷ்டமல்ல. பெந்தேகொஸ்தே நாளில் தேவாவியானவர் இறங்கி சீஷர்களை நிரப்பினபோது, கிறிஸ்துவின் அன்பின் ஜீவனாலே அவர்கள் நிரப்பப்பட்டப்படியால், பற்பல வித்தியாசங்களுள்ள திரளான விசுவாசிகள் "ஒரே இருதயமும் ஒரே மனமும்" உள்ளவர்களானார்கள். அவர்கள் தேவ அன்பினால் நிறைந்தபடியால் யாதொரு நிபந்தனைகள் இல்லாமலும், கமிட்டிகள் கூடி எப்படி ஐக்கியப்படலாமென்று வருஷக் காலங்களாக விவாதிக்காமலும் நிமிஷத்தில் ஒற்றுமையடைந்தார்கள். அருமை ரட்சகரின் சிந்தையுள்ள தேவ மக்கள் தாங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயினும் மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாகும்படி எப்பொழுதும் ஆயத்தமாகவே இருப்பார்கள். ஒரு சபையில் அல்ல. பல சபைகளிலும் அன்பினால் நிறைந்த மக்களின் ஐக்கிய சபை இருக்கவேயிருக்கிறது.

## 13. பல மிஷன்கள்

"உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்போல்லோவைச் சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் ஆவிக்கேற்றபடி நடவாமல் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷர் மார்க்கமாய் நடக்கிறீர்களே. இதனால் உங்களுக்குள்ளே வாக்குவாதமும் பேதகங்களும் இருக்கின்றன. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? திருச்சபையாகிய சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையாகிய அவரைப் பற்றிக்கொள்ளாமல் புறம்பான ஆசாரங்களிலும் கொள்கை

களிலும் பற்றுதல் வைத்து வைராக்கியம் பாராட்டுவதினாலே பிரிவினைகள் உண்டாகிறது" என்று பவுல் கொரிந்து சபையை எச்சரிக்கிறார்.

சபைப் பிரிவினைகளுக்கு ஆண்டவர் பக்கத்தில் எவ்வித காரணமுமில்லை. சபைத் தலைவர்கள் என்றெண்ணப்பட்ட மனுஷராலேயே பிரிவினைகள் உண்டாயின. நமக்குள் பிரிவினையை உண்டாக்கின பற்பல உபதேசங்களும் சடங்குகளும் அந்நிய தேசத்திலிருந்து நம் தேசத்திற்கு இறக்குமதியாக வந்ததேயல்லாமல் நம்மிலிருந்து உண்டானவைகள் அல்ல. பல மிஷன்களைச் சேர்ந்த பல மிஷனெரிகள் தங்களை அனுப்பின சங்கங்களுக்கு உத்தரவாதிகளாயிருக்கிறார்கள். தம் தம் கொள்கைகளை ஸ்தாபிப்பது அவர்கள் கடமையாயிருக்கிறது. அதுபோல அந்தந்த மிஷன்களைச் சேர்ந்த நம் தேசத்தவரும், அந்தந்த மிஷன் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு வேலை செய்ய வேண்டும். ஒரு மிஷனில் வேலை போய்விட்டால் இன்னொரு மிஷனில் அவர் சேர்ந்து, முந்தின மிஷன் கொள்கைகளைத் தள்ளிவிட்டு, புதிதாய்ச் சேர்ந்துகொண்ட மிஷன் கொள்கைகளை ஊக்கமாய்ப் பிரஸ்தாபிப்பார். ஏன் இப்படி என்று கேட்டால் பிழைப்பு பிரதானமேயன்றி கொள்கை பிரதானமல்ல என்பார். தென் இந்திய சபையின் ஐக்கியத்தாலே அந்தப் பிழைப்புக்கும் ஆபத்து வந்ததென்று ஒருவர் சொன்னார். ஏன் என்று கேட்க அவர்: ஒரு சபையில் வேலை போனால் வேறொரு சபையில் வேலை தேடலாம் என்னும் நம்பிக்கை இதுவரை இருந்தது. இப்போது இந்தச் சபைகள் ஒன்றுசேர்ந்து பிஷப் ஆளுகைக்குள்ளிருப்பதால் இத்துடன் சம்பந்தப்படாத வேறே சபைகளைத் தான் தேடிப் போகவேண்டும் என்றார். ஐக்கியமான சபைகள் எல்லாக் காரியங்களிலும் ஒன்றுபோலிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. ஒரு தோட்டத்தில் பற்பல நிறங்களுள்ள புஷ்பங்களைப் பார்ப்பது எவ்வளவு அழகு! ஆனால் அந்தத் தோட்ட முழுவதும் வெண்ணிறப் புஷ்பங்களாலே நிறைந்திருந்தால் பருத்திக்காடுபோல் அல்லவா தோன்றும். மனுஷருடைய ஏற்பாடுகளும் கொள்



கைகளும் மாறி மறைந்துபோகும். அவைகளிலே பிடிவாதம் பண்ணிப் பிரிந்து நிற்பது வீண் பெருமையும் அறிவீனமுமாகும். கிறிஸ்துவை நமது கண்முன் நிறுத்தி அவரது அன்பினால் நிறைந்து, அவரது சாயலுக்கொப்பாக மாற்றப்படுவதை நாம் பிரதானமாகத் தேடினால் ஆண்டவர் வேண்டிக்கொண்ட மெய்யான ஐக்கியத்தை நமக்குள்ளே காணலாம். மற்றப்படி எழுத்திலேதான் "தென் இந்திய சபையே" தவிர உண்மையிலே நமக்குள் ஐக்கியம் வராது. தனித்த ஒரு சபையிலேயே குழப்பங்கள் இருக்கும்போது, வித்தியாசங்களுள்ள பல சபைகள் சேருவதினால் ஐக்கியம் ஏற்படுமா? தேவ அன்பும் சகோதர அன்புமே திருச்சபையின் அழகு. அப்படிப்பட்ட ஐக்கியத்தை ஆண்டவர் வாய்க்கச் செய்வாராக.

## 14. தேவ ஊழியமும் பொருள் சகாயமும்

தேவ ஊழியம் நடந்தேற பொருள் சகாயம் வேண்டும். ஆண்டவர் ஊழியத்தில் அவர் பணத்திற்காகக் கவலைப்பட்டவரல்ல. என்றாலும் பக்தியுள்ள ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்து வந்தார்கள். மக்கெதோனியா அகாயாவிலிருந்த விசுவாசிகள் எருசலேமிலுள்ள சகோதரருக்கு பொருள் சகாயம் செய்தார்கள். இதுபோலவே அப்போஸ்தலனுடைய வேலைக்காகவும் சபைகள் பொருள் சகாயம் அனுப்பின. பணம் தன்னிலே கெட்டதுமல்ல, பிரயோஜனமற்றதுமல்ல. அதைச் சம்பாதிக்கிற விதத்திலும் செலவு செய்கிற விதத்திலும்தான் அதன் நன்மையோ தீமையோ இருக்கிறது.

தேவ ஊழியம் நடந்தேறும்படி ஆண்டவருக்குப் பிரியமான விதமாய்ப் பொருள் கொடுக்கப்படவேண்டும்; அவருக்குப் பிரியமான விதமாகவே பொருளைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். சர்க்கார் அதிகாரத்தோடே வரி வசூல் செய்வதுபோல நமது காரியம் இருக்கக்கூடாது. சபை சம்பந்தமாகப் பலவித செலவுகள் இருப்பதாலும், ஊழியர்களுக்குச் சம்பளம் போடவேண்டியதிருப்பதாலும், எந்தெந்த வகையாய் பணம் சேகரிக்கலாம் என்

னும் கவலை நம்மை ஆண்டுகொள்ளுகிறது. சபையாரின் வருமானத்தைக் கண்டறிந்து, அந்த வீதத்தின்படி ஆலய வரியை ஏற்படுத்தி, ஆட்களை அனுப்பி பணவசூல் செய்கிறோம். சிலர் சந்தோஷமாகக் கொடுக்கலாம். சிலர் வழக்கத்தை அனுசரித்து மாதச் செலவுகளோடு ஓர் செலவாகக் கொடுக்கலாம். சிலர் கஷ்டத்தோடு கொடுக்கலாம். சிலர் கொடாதபடி காலங் கடத்தலாம். பாக்கிகளை வசூலிக்கத் தக்க சமயங்களும் வரும். ஞானஸ்நானம், கலியாணம், சாவு முதலான காரியங்களுக்காக சபையார் குருவிடம் வரும்போது பர்க்கிப் பணம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். ஓட்டுக் கொடுக்கும் காலத்தில் பணம் பாக்கியுள்ளவர்கள் தங்களுக்கு இட்டுரிமை போய்விடாதபடி கடன் வாங்கியாவது தொகையைச் செலுத்திவிடுவார்கள் என்பதையும் அறிகிறோம். காணிக்கை விஷயத்திலும் ஏற்பாடுகள் உண்டு. சம்பளத்தை விசாரித்துச் சங்கப் பணம் விதிக்கப்படுகிறது. அதற்கு ஏற்பட்ட காணிக்கையைச் செலுத்தாவிடில் காரியம் நடக்காது. ஒரு ஆலயத்தில் விவாகம் நடந்த சமயத்தில் அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பட்ட காணிக்கையைச் செலுத்த முடியாதிருந்தார்கள். குருவோ பணம் செலுத்தாவிட்டால் தாலி கொடுப்பதில்லை என்று பிடிவாதமாயிருந்தார். உடனே கலியாணக்காரர் தங்கள் வீட்டுக்குச் சென்று தாங்களே கலியாணத்தை முடித்துக்கொண்டார்கள். வேறொரு ஆலயத்தில் கலியாண ஆராதனை நடந்தபோது, தாலி கொடாதபடி அப்படியே நின்றுகொண்டிருந்த போதகரைக் கவனித்து, ஏன் ஆராதனை நின்றுபோனதென்று என் பக்கத்திலிருந்தவரைக் கேட்டேன். "காணிக்கை வைக்கவில்லை, தாலி கொடுக்கவில்லை" என்றார்.

இவைகளையும் இவைபோன்ற காரியங்களையும் யோசிக்கும்போது நமது மனதுக்கு எவ்வளவோ வேதனையாயிருக்கிறது. உலகத்தார் தங்கள் காரியங்களை எவ்வாறு நடத்துகிறார்களோ அதுபோலதானே சபைகளின் காரியங்களும் இருக்கின்றன. கோவில் வரி சம்பந்தமாக நியாயஸ்தலம் சென்று வழக்காடுவதையும் அறி



வோம். எப்போப் பார்த்தாலும் "பணம் பணம்" என்று போதகர்கள் பஞ்சரிக்கிறார்களே என்று சபையார் முறுமுறுப்பதையும் கேட்டிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள்ளான சபையின் காரியமோ வேறு. உத்தம ஊழியம் நடக்க வேண்டுமென்பதும், சபையார் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுமே நமது பிரதான நோக்கம்.

பணம் நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷமல்ல. அதைப் பற்றி நாம் பேசுவதில்லை. தொகை குறிப்பதில்லை. கட்டாயமாக வாங்குவதில்லை. ஞானஸ்நானத்தில், கலியாணத்தில் காணிக்கை வைப்பவர்கள் உண்டு; வைக்காதவர்களுமுண்டு. இருபட்சத்தாருக்கும் நமது பணிவிடை ஒன்றுபோலவே நடந்தேறும். இந்தப் பரிசுத்த ஊழியத்தை தேவ பராமரிப்புக்கு விட்டிருக்கிறோம். கர்த்தருடைய ஊழியத்திற்கு சபையார் எவ்வளவு கொடுப்பார்களோ அது அவரவருடைய இஷ்டம். அது அவர்களுக்கும் ஆண்டவருக்குமுள்ள காரியம். கர்த்தர் மோசேயைப் பார்த்து: "மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்கு" என்றார். "அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்" என்று ஆவியானவர் பவுல் மூலம் கற்பித்தார். அதுவே பண விஷயத்தில் நமது பிரமாணம். "பணம் வாங்கவரவில்லையே" என்று கேட்டிருக்கிறார்களே தவிர "பணம் பணம்" என்று தொந்தரவு கொடுக்கிறார்களே என்று சபையார் குறைகூறினதில்லை. பொருள் சகாயத்தை ஏற்றுக்கொள்ளும்படி மக்கெதோனியாச் சபைகள் அப்போஸ்தலரை மிகவும் வேண்டிக்கொண்டதாக வாசிக்கிறோம் (2. கொரி. 8: 4). பணம் சேகரிப்பதற்காக எவ்விதமான உலக முறைகளையோ, விற்பனைகளையோ, நாடகம் வேடிக்கைகளையோ நாங்கள் கையாடுவதில்லை. எல்லாரும் சிரிக்கும்படி பொருள்களை விகடம் பேசி ஏலம் போடும் வழக்கம் நல்லதல்ல. ஒரு முட்டையையோ, ஒரு சீப்பு பழத்தையோ இருவர் போட்டி போட்டுக்கொண்டு இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் என்று

உயர்த்தி விடுகிறார்கள். அதைச் செலுத்துவதும் பிந்திக் கஷ்டமாகிவிடுகிறது. ஆண்டவருடைய வேலைக்கென்று நேரே கேட்டால் கொடுக்க மனமற்றவர்கள், வேடிக்கை பார்க்கக் டிக்கட்டுகள் மூலம் சந்தோஷமாய்க் கொடுக்கிறார்கள். இவ்விதமான தகாத முறைகளால் சேகரித்த பணத்தை ஆண்டவர் சமுகத்தில் வைத்து: "ஆண்டவரே உமது ஜனம் உமது ஊழியத்துக்காகக் கொடுத்த காணிக்கையை ஆசீர்வதியும்" என்று சொல்வது முழுப் பொய்யல்லவா?

பணம் சேகரிப்பதற்காக நாம் மனுஷரைப் பிரியப்படுத்தவோ முகஸ்துதி பேசவோ வேண்டாம். ஒரு தனி விசுவாசி தனக்கு வேண்டிய காரியங்களுக்காக கர்த்தரை நம்பிப் பிழைப்பதுபோல, நமது சபையின் காரியங்களையும் ஆண்டவருக்கு ஒப்புவித்து அவரையே சார்ந்து பிழைக்க வேண்டும். தேவ ராஜ்யத்தையே நாம் பிரதானமாய்த் தேடும்போது ஆண்டவர் தமது ஊழியத்தைக் காப்பாற்றுகிறார். ஆசீர்வாதம்பெற்ற தேவமக்கள் தங்களால் இயன்றதை உற்சாகமாய்க் கொடுக்கிறார்கள். தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் தங்கள் பணத்தைக் கொடுப்பது பெரிய காரியமல்ல. ஆராதனைகளும் பிரசங்கங்களும் தேவ ஊழியமாயிருப்பதுபோல, அவ்வூழியம் நடந்தேறும்படி பொருள் சகாயம் செய்வதும் தேவ ஊழியம் என்பதை அவர்கள் அறிவார்கள் (2 கொரி. 9: 12). உற்சாகமாகக் கொடுப்பவர்களுக்கும் கொடுக்க முடியாமலிருப்பவர்களுக்கும் நமது பணிவிடையில் வித்தியாசமிருக்கக்கூடாது. பணத்தையல்ல அவர்களுடைய ரட்சிப்பையே நாம் பிரதானமாகத் தேட வேண்டும். அப்படியே இஷ்டம்போல் விட்டுவிட்டால் வருமானம் குறைந்துபோகாதா? ஒருவேளை குறையலாம். ஆனால் வேலைக்கு அதனால் பாதகம் ஏற்படுவதில்லை.

வருமானம் சொற்பமாயுள்ள சபையில் தேவாசீர்வாதம் இல்லையென்றோ, ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருக்கும் சபையில் ஆசீர்வாதம் பெருகிவிட்ட



தென்றோ யார் சொல்லக்கூடும்? மதுரை மீனாட்சி அம்மையார் ஆலயத்தின் வருமானத்துக்கு நிகருண்டா? அதிகப் பண வருமானமுள்ள ஓர் சபையின் போதகரைப் பார்த்து: உங்களுக்குப் பணக்குறைவில்லையே என்றேன். அதற்கு அவர்: பணக்குறைவுமில்லை, பிசாசின் கோஷ்டத்துக்கு அளவுமில்லை. சபை அங்கத்தினருக்குள் அன்போ ஐக்கியமோ கிடையாது. எப்போப் பார்த்தாலும் போராட்டமும் பிரிவினையும்தான் என்று பெருமூச்சுவிட்டார். பணத்தைக்கொண்டு சபைகளின் நிலைமையை மதிப்பது சரியல்ல. "முதலில் பணம், அப்புறம் ஊழியம்" என்பது மிஷன்களின் ஏற்பாடு. சபையின் மகிமை ஆவிக்குரிய ஐசுவரியமேயன்றி பணப்பெருக்கமல்ல. "தரித்திரர் என்று எண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கக்கூடிய" தேவமக்கள் சபைகளில் இருக்கிறார்கள். "வெள்ளியும் பொன்னும் எங்களிடத்தில் இல்லை" என்று சொன்ன ஏழைகள் பிறவிச் சப்பாணியை நடக்கச் செய்தார்கள். ஒருவனுடைய உண்மையான குணப்படுதல் அற்புதத்திலும் மேலானது. உலக முழுவதும் அதற்கு ஈடாகாது. ஆண்டவர் சொன்ன "பெரிய கிரியைகள்" அதுதான். ஒரு சபையிலுள்ள ஏராளமான பணத்தைக் கண்டு தேவதூதர்கள் சந்தோஷப்படாமல் அந்தச் சபையில் ஒரு பாவி மனந்திரும்புவதைக் கண்டு மிகுந்த சந்தோஷப்படுகிறார்கள். தேவராஜ்யத்தின் வேலையைப்பற்றி எவ்வளவோ தாராளமாய் ஊக்கமாய்ப் பேசின ஆண்டவர் அதற்காகப் பணம் சேகரிப்பதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. மேலும் பொருளைப்பற்றி அவர் பேசும்படி நேரிட்ட சமயங்களிலெல்லாம் அவருடைய கண்டிப்பான எச்சரிப்பைத்தான் கேட்கிறோம். இப்படிச் சொல்வதினாலே பணம் வேண்டியதே இல்லை என்பது நமது கருத்தல்ல. பணம் பெரிய காரியங்களைச் செய்யும். மனுஷர் கண்டு புகழக்கூடிய காரியங்களை நடப்பிக்கும். பணம் விசாலமான நிலத்தை வாங்கும். உயர்ந்த கோபுரங்களுள்ள ஆலயங்களைக் கட்டும். போதகர்கள் பிரசங்கிகளை ஏற்படுத்தும். புதிதாய் வேதத்தில் சேருகிற ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு

நிலங்கள், வீடுகள், ஆடுமாடுகளை வாங்கிக் கொடுக்கும். ஆனால் பாவிகளை ரட்சிக்கும் வல்லமை பணத்துக்கில்லை. தேவ ஈவாகிய பரிசுத்த ஆவியைப் பணத்தினால் வாங்க நினைத்த சீமோனை பேதுரு பலமாய்க் கண்டித்தார். ஆவிக்குரிய ஊழியரால் ஆவிக்குரிய வேலை நடக்கும்போது ஆண்டவர் அவர்களை ஆதரிக்காமல் விடார். "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்றும், "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும்" என்றும் கட்டளையிட்ட கர்த்தர் தமது உத்தம ஊழியரையும் அவர்கள் ஊழியத்தையும் கைவிடமாட்டார்.

சபைகளின் காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு போகும் இச்சமயத்தில் பிரபல்யமான கிறிஸ்தவ சங்கங்களை நாம் மறக்கலாகாது. கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (Y. M. C. A.); கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் சங்கம் (Y. W. C. A.); கிறிஸ்தவ மாணாக்கர் சங்கம் (S. C. M.); கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் (C. E. S.) எனப் பல சங்கங்களை அறிவோம். மகா சிறந்த நோக்கத்துடன் இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறியவர்களும் பெரியவர்களும் ரட்சிப்பின் மாறுதலடைந்து கிறிஸ்துவின் சாட்சிகளாக உழைக்கவேண்டுமென்பதே அந்தச் சிறந்த நோக்கம். அக்காலத்தில் ஜெபதபங்களும், வேத ஆராய்ச்சிகளும், கிறிஸ்துவைப்பற்றிய போதனைகளும் சிரேஷ்டமாய் நடந்தேறின. இன்று அச்சங்கங்களின் நிலைமை என்ன? சபைகள் எப்படிப் பரிதாபமான நிலைமைக்கு வந்துவிட்டதோ; அதேபோல சாத்தானின் தீய வல்லமைகள் இச்சங்கங்களையும் ஆண்டுகொண்டன. இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரிக்க நேரிட்டிருக்கிறது. "எம்மதமும் சம்மதம்" என்ற சமரச நிலைமைக்கு வந்திருக்கிறது.

சங்கங்களுக்கு உதவிபுரிந்த பரோபகாரிகள் சுய தேசம் போய்விட்டபடியால் சங்கங்களைக் காப்பாற்ற வேறு வழிகளைத் தேடும் சிரமம் ஏற்பட்டது. இதனால் சாப்பாட்டு விடுதிகளும், சப்பாத்துக் கடைகளும்,



ஜவுளிக் கடைகளும் ஸ்தாபனத்தைச் சூழ்ந்து பெருகின. வருஷக் கடைசியில் கார்னிவல் என்னும்போரால் நடனப் பெண்களைக் கொண்டுவந்து நாட்டியங்கள் ஆடவைத்தும், சினிமா நடிகர்களை அழைத்து அபிநயக் கூத்துகளைக் காண்பித்தும் கிறிஸ்தவ சங்க வேலைக்காக பணம் சேகரிப்பது எவ்வளவு துயரமான விஷயம்! ஓர் காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களை நினைக்கவும் முடியுமா? ஓர் சிறிய தவறானாலும் சபையின் கண்டிப்பு பலமாயிருக்குமே. உலக வல்லமை சபைகளை ஆண்டுகொண்டபடியால் நாம் உணர்ச்சியற்றுப் போனோம். "என்னைப் பணிந்துகொள்ளும், எல்லாம் உமக்குத் தருவேன்" என்று நமதாண்டவரைச் சோதித்த சாத்தான் சபைகளையும் சங்கங்களையும் தன் கைவசப்படுத்திக்கொண்டான். தகாத வழியில் பணம் சம்பாதிப்பதைவிட வேலைகளை மூடிவிடுவது நல்லது. அக்காலமும் நெருங்கிவிட்டது.

## 15. கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம் இருக்கமுடியுமா?

இதை நான் எழுதிக்கொண்டிருக்கையில் "கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கம்" இருக்கமுடியுமா என்று ஒருவர் என்னைக் கேட்டார். சரியான கேள்வி. இருக்கமுடியாதென்று சொன்னேன். இது "அநீதியுள்ள நியாயாதிபதி" என்று ஆண்டவர் சொன்னதைப்போலிருக்கிறது. நீதியுள்ளவனே நியாயாதிபதி. நீதியற்றவன் நியாயாதிபதியல்ல. என்றாலும் பேச்சுக்கு அப்படிச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. நல்லதம்பி என்பது ஒருவன் பேர். அவனோ கெட்டதம்பியா யிருக்கிறான். அப்படி யிருந்தாலும் நல்லதம்பி என்றே அவனைக் கூப்பிடுகிறோம். கிறிஸ்தற்றவன் கிறிஸ்தவனல்ல. கிறிஸ்தற்ற மார்க்கம் கிறிஸ்து மார்க்கமல்ல. அப்போஸ்தலர் எங்கும் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். விசுவாசித்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்பட்டார்கள். பவுலுடைய பிரசங்கப்பொருள் கிறிஸ்து. "நாங்களோ கிறிஸ்து

வைப் பிரசங்கிக்கிறோம்" என்றார். கிறிஸ்து மார்க்கத்துக்கு கிறிஸ்துவே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். சபைகளில் மனுஷர் ஏற்படுத்தின காரியங்களை நாம் முக்கியப்படுத்தி கிறிஸ்துவை இழந்தோம். எங்கே அவருக்கு இடமில்லையோ அங்கே அவரது மகிமைக்கு இடமில்லை. தங்கள் பாவத்தால் கர்த்தரின் சமுகத்தை இழந்த இஸ்ரவேலர், கர்த்தருடைய பெட்டியால் தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று நினைத்து, மகா ஆரவாரத்தோடு அதைக் கொண்டுவந்து, பெலிஸ்தரோடே யுத்தம் பண்ணினார்கள். பெட்டியும் பிடிபட்டது; பெரிய அழிவும் உண்டானது. கர்த்தரற்ற மனுஷருக்கு கர்த்தருடைய பெட்டியால் பிரயோஜனமென்ன? கிறிஸ்தற்ற மனுஷருக்கு கிறிஸ்து மார்க்கத்தால் பிரயோஜனமென்ன? ஆலயமோ ஆலயமில்லையோ, சபையோ சபை இல்லையோ, போதகரோ போதகர் இல்லையோ, கிறிஸ்து இல்லாமல் நமக்கு ரட்சிப்பு இல்லை. இவர் மாம்சத்தில் வெளிப்பட்ட கடவுள். கடவுளுடைய மகிமையின் பிரகாசம். சூரியனை நாம் பார்க்க முடியாது. அது பூமியைச் சுற்றியுள்ள ஆகாயத்தின் மூலமாய் தன் பிரகாசத்தை மட்டுப்படுத்தி தன்னை நமக்கு வெளிப்படுத்துகிறது. கடவுளை அவர் இருக்கிறபடி காணவோ அறியவோ முடியாது. மாம்சத்தில் வந்த கிறிஸ்துமூலமாய் நமது நிலைமைக்குத் தக்கதாக தேவன் தம்மை அளவுக்குட்படுத்தி வெளிப்படுத்துகிறார். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். நமக்கு வேண்டிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கின்றன. கடவுளைத் தேடி நாம் வானத்துக்கு ஏறவேண்டியதில்லை. எல்லையில்லா ஆகாயத்தைச் சுற்றி அலையவேண்டியதில்லை. "நானும் பிதாவும் ஒன்று" என்றார். கிறிஸ்துவைச் சொந்தமாக்கி அவராலே பிழைக்கிறவன் அவருக்குள்ளான ஆசீர்வாதங்களைப்பெற்று அனுபவிக்கிறான். இது வீண் பேச்சல்ல கிறிஸ்தற்ற மனுஷன் சகலத்தையும் இழந்துபோகிறான்.

ஆகையினால்தான் கிறிஸ்து தம்மையே நமக்குக் காண்பிக்கிறார். தம்மை முக்கியப்படுத்துவதால் இவர் பிதாவைக் கனவீனம் பண்ணவில்லை. நாம் பிதாவை நோக்கினால் அவர் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து: "இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்கிறார். நாம் ஆவியானவரை நோக்கினால் அவர் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து அவரை நமக்குள் மகிமைப்படுத்துகிறார். ஆகையால்தான் கிறிஸ்து நடுநாயகனாக எல்லாரையும் தம்மிடம் அழைக்கிறார். மனுமக்களுக்கு கிறிஸ்து சகலத்திலும் சகலமுமாயிருக்கவேண்டுமென்பது தேவ தீர்மானமாகயிருக்கிறது. "என்னிடத்தில் வாருங்கள்", "என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்", "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்", "என்னைப் பின்பற்றுங்கள்", "என்னிடத்தில் அன்பாயிருங்கள்", "என்னில் நிலைத்திருங்கள்", "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார். நமக்கு எல்லாம் அவரே. இப்படியிருக்க, கிறிஸ்தற்ற வேத அறிவினால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற விசுவாசப்பிரமாண அறிக்கையால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற ஆராதனைகளால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற பிரசங்கக் கேள்விகளால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற நற்கருணையால் பிரயோஜனம் என்ன? "மதிகேடரே குருடரே எது பிரதானம்' என்று சபைகளைக் கேட்கிறார். தேவனுடைய சகல பரிபூரணத்தையும் தமக்குள் உடையவராகிய கிறிஸ்து ரட்சகரை நாம் சொந்தமாக்கிக்கொள்ளாமல், அசட்டையாயிருந்து கிறிஸ்துமார்க்கத்தின் பேராலே நாம் எத்தனை காரியங்களைச் செய்தாலும் பிரயோஜனம் என்ன? "கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கமே" சபைகளில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும் கேடுகளுக்கும் காரணமாயிருக்கிறது. தலையில்லாச் சரீரமும் கிறிஸ்தற்ற சபையும் ஒன்றுதானே.

ஆலயத்தின் அலங்காரக் காட்சிகளைக் கண்டு ஏமாந்து போகக்கூடாது. ஓர் இரவில் ஒரு பெரிய ஆலயத்தில் ஆராதனை நடந்துகொண்டிருந்தபோது, ஒரு மனுஷன் கோபுரவாசலில் நின்று உள்ளேயிருந்த பீடத்தையும் ஆராதனை நடத்தினவரையும் பார்த்தான். மேலிருந்து கீழ்வரை தொங்கின அழகான திரைகளையும், மேஜையின் மேல் போட்டிருந்த பட்டுகளையும், மேஜையின் இரு

பக்கங்களிலும் ஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த விளக்குகளையும், குருவானவர் தரித்திருந்த பளபளப்பான உடுப்புகளையும், பாடகர் வரிசையையும் கண்டபோது அவன் பரவசமடைந்து: ஆகா, இவ்வாலயம் சுவர்க்கலோகம் போலிருக்கிறதே என்றான். அலங்கார விஷயத்தில் ரோமைச் சபை ஆலயங்களின் அழகுக்கும், குருக்களுடைய அலங்கார உடைகளுக்கும் எதுவும் இணையாகாது. புறம்பான அலங்காரங்கள் மனுஷருக்குள் பரவசத்தை உண்டாக்கலாம், ஆத்துமாவை ரட்சிக்காது. சிறுவயது முதல் சடங்காசார ஆராதனைகளில் பழகினவர்களுக்கு அதுவே மார்க்கமாகிறது. எழுப்புதலும் பரவசமும் ரட்சிப்பல்ல. மேலும் நீண்டகாலப் பழக்கத்தால் பரவசம் படுத்துக்கொள்ளும். ஆகாயவிமானம் முதல்முதல் வந்தபோது ஜனங்களுக்கிருந்த ஆச்சரியம் கொஞ்சமல்ல. இப்போது அதை ஏறிட்டுப் பார்ப்பார் இல்லை. அழகிலும் ஆராதனைகளிலும் எருசலேம் ஆலயத்துக்கு நிகருண்டா? ரட்சண்ய கர்த்தாவை அவர்கள் அறியாமல் போனபடியால் அவர்களும் அழிந்தார்கள், அவர்கள் ஆலயமும் அழிந்தது. அதுபோலவே நமக்கும் சம்பவிக்கலாம். ஜீவனுள்ள ரட்சகரை அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளாமல் இப்படிப்பட்ட புறம்பான ஆசாரங்களிலே பற்றுதல் வைப்பவர்கள் மோசம் போவார்கள். "மனுஷருக்குள் மேன்மையாய் எண்ணப்படுகிறவைகள், கர்த்தருடைய பார்வையில் அருவருப்பாயிருக்கின்றன." சபையார் ரட்சிக்கப்படத்தக்கதாக கிறிஸ்துவை போதிக்காமல் சடங்காசாரங்களாலே அவர்களை மயக்கி மோசஞ்செய்வது கொடிய பாதகமாகும். ஆவியும் உண்மையுமற்ற அலங்கார ஆராதனையைவிட ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் குடிசைக் கோவில் மேல்.

## 16. கிறிஸ்தற்ற நிலைமையின் மோசம்

அப்போஸ்தலன் எபேசியரைப் பார்த்து: "அக்காலத்திலே நீங்கள் கிறிஸ்துவைச் சேராதவர்களாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவுக்குள் சமீபமானீர்



கள்" என்கிறார். "முன்னே, இப்பொழுது" என்னும் வார்த்தைகள் நிருபங்களில் திரும்பத்திரும்ப வருகின்றன. அவைகள் கிறிஸ்தற்ற முந்தின நிலைமையையும், அவரை ஏற்றுக்கொண்டபின் உண்டாகும் மாறுதலையும் காண்பிக்கின்றன. கிறிஸ்து யார் யாருக்குள் பிரவேசிக்கிறாரோ அவர்கள் முன்னிருந்தபடி இருக்கவேமாட்டார்கள். இது எக்காலத்திலும் உண்மை. ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது மெய்யானால் அவன் தன்னைக் குறித்து: "முன்னே, இப்பொழுது" என்று பேசுகிறான். முன்னே இரக்கம் பெறவில்லை; இப்பொழுது இரக்கம் பெற்றேன். முன்னே அந்தகாரம், இப்பொழுது வெளிச்சம். முன்னே பகை, இப்பொழுது சமாதானம். முன்னே சாவு, இப்பொழுது ஜீவன். முன்னே பிரிவினை, இப்பொழுது ஒற்றுமை. முன்னே வம்பன், இப்பொழுது அன்பன். முன்னே உலகத்தான், இப்பொழுது பரலோகத்தான் என்று சொல்லும் கிருபை பெற்றிருக்கிறான். ஒருவனுடைய குணத்தையும் நடக்கையையும் மாற்றாத மார்க்கம் தேவமார்க்கமல்ல. அது "கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்." சபையிலுள்ளவர்கள் இந்த ரட்சிப்பின் மாறுதலைப் பெற்றிருப்பார்களானால் சபைகள் ஜீவ தண்ணீருள்ள நதிகளாயிருக்கும். நாம் கிறிஸ்துவின் சிந்தையால் நிறைந்து, ஒருவருக்கொருவர் அன்பும், அனுதாபமும், இரக்கமும், சமாதானமும், பொறுமையும், நன்மை செய்யும் சுபாவமும் உள்ளவர்களாய் நடந்துகொள்வோம். இந்தத் தெய்வீக லட்சணங்கள் ஏன் சபைகளில் இல்லை? கிறிஸ்துவுக்கு அங்கே இடமில்லை. நமது ஜீவனாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், ஆராதனைகளை நடத்துவதும் பற்பல வேலைகளைச் செய்வதுமாயிருக்கிறோம். நமது ஜீவியம் ஆண்டவருக்குப் பிரியமில்லாதிருக்க, நமது வேலைகள் எப்படி அவருக்குப் பிரியமாயிருக்கும்? இதைக் கொஞ்சமும் நாம் யோசிக்கிறதில்லை. நமது ரட்சகரும் ராஜாவுமாகிய கிறிஸ்துவை சகலத்திலும் சகலமாக்காமல் சபைகளுக்கு நற்காலம் வரப்போகிறதில்லை. நமது தனி ஜீவியத்திலும், குடும்பங்களிலும், சபைகளிலும், கமிட்டிகளிலும், ஆலோசனைச் சங்கங்களி

லும் ஆண்டவர் பூரண ஆளுகை செய்யவேண்டியது அவசியம். சபைகள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அதுதான் வழி.

நாம் ஒரு சபையைச் சேர்ந்திருப்பதே போதும் என்று நினைக்கக்கூடாது. சபையல்ல கிறிஸ்துவே நமது ரட்சிப்பு. கிறிஸ்தற்ற மனுஷனுக்கு ரட்சிப்பில்லை, ஜீவன் இல்லை, சமாதானம் இல்லை, நம்பிக்கை இல்லை, நற்குணமில்லை, இனி வெளிப்படும் மகிமையில் பங்கில்லை. ஒருவன் கிறிஸ்துவை உடையவனும் கிறிஸ்தற்றவனுமாயிருக்க முடியாது. அவன் ஜீவன் பெற்றவனும் ஜீவனற்றவனுமாயிருக்க முடியாது. கிறிஸ்துவே நமது ஜீவன். அவரைச் சொந்தமாக்கிக்கொள்ளுகிறவனுக்கு அவர் இப்போதே ஜீவனாகிறார். குடும்பங்களிலும் சபைகளிலும் நாம் காண்கிற சகல குழப்பங்களுக்கும் சங்கடங்களுக்கும் காரணம் கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொண்டு பிழைக்காததினாலே தான். கலியாணமான வாலிப மணமக்கள் வருஷக்காலமாகப் பிரிந்திருப்பது எவ்வளவு துயரமான விஷயம்! இம்மையின் வாழ்வு ஓர் சிறிய பிரயாணம். நாம் ஒரே தரம் இவ்வழி நடக்கிறோம். இம்மை மறுமை என்று இரண்டில்லை. நமது ஜீவியம் ஒரே தொடர்ச்சியாகயிருக்கிறது. எவ்வித நிலைமையில் உலகை விடுகிறோமோ அதே நிலைமையிலேதான் மறுமைக்குட் பிரவேசிப்போம். நாம் மறுபடியும் இங்கே வந்து நமது ஜீவியத்தைச் சரிப்படுத்தவும் நற்கிரியைகளைச் செய்யவும் முடியாது. ஏனென்றால் "ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும்" தேவ ஏற்பாடாயிருக்கிறது. இங்கே கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக்கொண்டவர்களுக்கு அந்த நாள் பாக்கியமான நாள். கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்து நியாயாதிபதியாக வெளிப்படுவது கொடிய சஞ்சலமான நாளாயிருக்கும்.

சகோதரரே! இதுவரை நமது மார்க்கத்துக்கடுத்த பல காரியங்களைச் சிந்தித்தோம். நமது ஆராதனைகளிலும், வேலைகளிலும், சங்கங்களிலும் ஆண்டவருக்குப் பூரணமான இடம் கொடுக்கப்படாததால் விளைந்த பாவங்



களையும் பல சங்கடங்களையும் உணர்ந்தோம். என்ன செய்யப்போகிறோம்? ஒன்று நாம் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிப் பிழைக்கும் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம்; அல்லது இன்னும் கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். இது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். அவர் நமக்குள்ளே இருந்தால் வெளியே நின்று அவர் தட்டவேண்டியதில்லை. சர்வலோகங்களையும் சொல்லால் உண்டாக்கும் சர்வவல்லமையுள்ள ஆண்டவருக்கு நமது சம்மதமின்றி நம்மை ரட்சிக்கமுடியாது. மனமில்லாதவர்களை அவர் கட்டாயமாய் ரட்சிக்கிறதாயிருந்தால் உலகத்தார் யாவரையும் ஒரே நிமிஷத்தில் மகிமையில் சேர்த்திருப்பார். அப்படியானால் "உன்னைச் சேர்த்துக்கொள்ள எத்தனை தரமோ நான் மனதாயிருந்தேன், உனக்கோ மனதில்லாமற்போயிற்று என்றும்; உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே" என்றும் அவர் கண்ணீர்விட்டுப் புலம்பவேண்டியதென்ன? நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள இந்நிமிஷத்திலும் அவர் வாஞ்சையோடிருக்கிறார். பற்பல வகையாய் நம்மைச் சொந்தமாக்கிக்கொள்ளவும் முயற்சிக்கிறார். அவரைத் தொட்ட நிமிஷத்தில் ஆச்சரியமான மாறுதல் நம்மில் உண்டாகும். அவர் நமக்குள் வசிக்க இடம் பெற்றால் நாமும் ஆசீர்வதிக்கப்பட்டு அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் இருப்போம் என்பது நிச்சயம்.

தேவ ஊழியருக்கு ஒரு வார்த்தை. கிறிஸ்துவே ரட்சிக்கிறவர் என்பது உண்மையாயினும் ரட்சிப்பின் சுவிசேஷத்தை நமது கைகளில் தந்திருக்கிறார். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்துப்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்; அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" என்று அப்போஸ்தலன் மேற்கொண்ட தீர்மானம் நம்மையும் ஆண்டுகொள்ளட்டும். உலகமே பாழாய் அழிந்துபோகிற இக்காலத்தில் நாம் அசதியாயிருப்பது

சரியல்ல. பலத்த சோதனையான காலம் இப்பொழுது சபைகளுக்கு வந்திருக்கிறதென்பதை மறக்கவேண்டாம். சபையிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரட்சிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெப சிந்தையோடும் ஆவியின் பலத்தோடும் உழைப்போமாக. பிழைப்பு, கடமை, மனுஷர் புகழ்ச்சி, பேர்ப்பிரஸ்தாபம், சம்பாத்தியம் என்னும் நோக்கங்களைத் தூர எறிந்துவிட்டு, கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆத்ம வாஞ்சையுடன் கிறிஸ்துவைப் பிரசங்கிப்போமானால் கட்டாயம் பலன் கிடைக்கும். ஆராதனைதோறும் பிரசன்னமாயிருக்கிற ஆண்டவர் உத்தம ஊழியத்தை ஆசீர்வதித்து அநேகரைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்வார். நாம் மகிமையில் பிரவேசிக்கும்போது கிறிஸ்துவின் அளவற்ற அன்பின் பெருக்கத்தையும், கிருபையின் ஐசுவரியத்தையும் கண்டு, இங்கே யிருந்தபோது ஆண்டவருக்காக இன்னும் அதிகமாய் உழைத்தோமில்லையே, இன்னும் அநேகரை ரட்சிப்பின் வழியில் நடத்தினோமில்லையே என்று உணர நேரிடும். ஆகையால் ஆண்டவர் கொடுத்த வேலையை நாம் சுகத்தோடும் பலத்தோடும் இருக்கும்போதே உண்மையோடும் ஊக்கத்தோடும் நிறைவேற்றுவோம். "எப்படியாகிலும் சிலரை ரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொன்ன பவுலின் வாஞ்சை நம்மையும் ஆண்டுகொள்ளட்டும். கர்த்தர் நம்மை அழைக்கும் வேளை வரும்போது: "ஆண்டவரே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த வேலையை உமது கிருபையால் செய்து முடித்தேன், என் பிழை பொறுத்தருளும் ஸ்வாமி" என்று சொல்லி அவரிடம் சேரும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

"கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம்"

## ஐயரின் பிற நூல்கள்

ஏழு வார்த்தைகள்

இருதயத்தில் கிறிஸ்து

கிருபைப் பிரவாகம்

கிறிஸ்தவ ஜீவியம்

என் சுய சரிதை

நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்

## வர இருப்பவை

கிறிஸ்துவின் ஜீவியம்

நூறு பிரசங்கங்கள்

DBD 1181
Rs 30.00

CLS

**KIRISTATRA KIRISTU MĀRKKAM**

By S. Paramanantham

விலை ரூ. 30.00 (இந்தியாவில் மட்டும்)